# சிரித்திரன்

## பால் பொங்குமா!



**சுவடு**

இன்றைய
காலடிகள்,
நாளைய
வரலாற்றுச்
சுவடிகள்.

□ □

புத்தாண்டுப்
புனித மண்ணில்
எங்கள்
காலடிகள்
திருவடிகளாகட்டும்

□ □

வடுவிலாச்
சுவடுகளென
நாளைய ஏடுகள்
எம்மைப்
பாடட்டும்.

—லாவண்யா

அடுத்த இதழில்
சிரித்திரன் சிறு கதை:
"கானல் வரிகள்"
யோகேஸ்
கணேசலிங்கம்
எழுதியது

செ. யோகநாதனின்
புதிய குறுநாவல்
"சைக்கிள்"
அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது!

விலை ரூபா 2-50 ஜனவரி 1984

If you have decided upon a Travel
Please Dial 01 223 6032

Jana Enterprises will make your Journey a Joy For Ever.

For your Business in London also Contact

## Jana Enterprises Ltd

பிரயாணம் செய்யப் போகிறீர்களா? சௌந்தர்யமான, சௌகர்யமான சூழ்நிலையில் உங்கள் பிரயாணத்திற்கு,

சகல ஒழுங்குகளும் செய்து தருபவர்கள்-

## ஜன எண்டர் பிறைசெஸ் லிமிட்டட்

இங்கிலாந்தில் வர்த்தகம் செய்யவும் தொடர்பு கொள்ளுங்கள்,

# JANA ENTERPRISES LTD

TRAVEL & COMMISSION AGENTS


38, WROUGHTON ROAD,
LONDON S W. 11-6 B. G.
U. K.

T' Phone: 01 223 6032

சிரித்திரன்

நகை 21 சுவை 1 ஜனவரி 1984

# எண்பத்தி நாலில் நல்வழி பிறக்கட்டும்



பொழுது புலர்ந்து விட்டால் மரத்தில் பொலு பொலு வென பட்சிக் கூட்டம் வந்து குவிவது போல் எமக்குப் புதுவருடம் பூத்து விட்டால் வாழ்த்துப் பத்திரங்கள் வந்து பொலிந்து குவியும், நாமும் குவலையத்தை ஆனந்த மனேலயத்தில் பார்க்கின் ேறு ம். நாட் குறிப்பு ஏடுகளிலும் குதூகலச் சம்பவங்களைக் குறிக்க முனைகிறோம்.

83ம் ஆண்டு நாட் குறிப்பைப் புரட்டுகிறேன். கண்ணீர் திரை யிடுகிறது. குறிப்பை மூடி வைக்கின்றேன். அந்தப் புது வருட வாழ்த்துக்களை எண்ணிப் பெருமூச்சு விடுகின்றேன்

84ம் ஆண்டு பூத்துவிட்டது. வாழ்த்து மடல்களும் வழமையான வாழ்த்துக்களைக் கூறுகின்றன. 84ம் ஆண்டாவது நாலும் நடக்காது நல்லது நடக்க வேண்டுமென எண்ணுகிறேன்.

சுற்றத்தார் புடைசூழ அன்று புது வருடம் கொண்டாடினேம். இன்று அப்படியல்ல, எமது சுற்றமெல்லாம் எம்மை வாழ வைப்பதற்காக அந்நிய நாடு போய்விட்டார்கள். அவர்களும் புது வருடப் பொன்னுளில் தைப் பொங்கல் நன்நாளில் தாம் உற்றுருடன் இல்லையேயென்று உருகுவார்கள்.

பொருளாதார கஷ்டம் எம்மையெல்லாம் பிரித்து வைத்துவிட்டது. இந்த நிலை நீடித்தால் எமது பாசத்திற்கு பங்கமேற்படுமோ என்ற பீதி எம்மை ஆட்கொள்கிறது. கலாச்சாரமும் கலந்து விடுமோ என்று கலங்குகின்றேம்.

அந்நிய நாட்டிலிருந்து நம் மண்ணிற்கு வரும் பணத்தை வீண் ஆடம்பரங்களில் விரையம் செய்யாது நாட்டை முன்னேற்றும் முயற்சிகளில் முதலீடு செய்ய வேண்டும். அந்நிய நாட்டில் விழித்திருந்து தேடிய பணத்தை கண்மூடித்தனமாக செலவிடக்கூடாது. மண்ணிற்கு வரும் ஒவ்வொரு காசும் நாட்டின் உயர்வுக்கு உரமாக வேண்டுமென்ற உணர்வில் செலவிட வேண்டும். நாளைய பெற்றேரும் பிள்ளைகளைப் பிரிந்து இருக்கும் சூழ்நிலை ஏற்பட விடாது எமது மண் சுபீட்சம் காண வேண்டும்.


இந்தச் சோக நிலையிலும் சமூக உணர்ச்சியில்லாச் சடலங்கள் எமது மண்ணில் நடமாடிக் கொண்டுதான் இருக்கின்றன. ஏணி வைத்தாலும் எட்டிப் பிடிக்க முடியாது காணி விலையை உயர்த்தும் நிலப் பிரபுக்கள், சீதனம் கறக்கும் பாதகர்கள், இருட்டுக் கோஷ்டியினர் எல்லோரும் மண்ணிற்கு வரும் பணத்தைச் சூறையாடிக்கொண்டிருக்கின்றர்கள்.


விண்வெளி தாண்டி செவ்வாய்க் கிரகத்தில் குடியேற ஆயத்தம் செய்யும் காலத்தில் அயல் ஊர் கூடப் போகேலாத நிலையில் எமது வீதிகள் இருக்கின்றன.

அந்நிய நாட்டில் வேலை செய்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியநண்பரொருவர் எமது வீதிகளைப் பார்த்துவிட்டு ''யார் சொன்னது யாழ்ப்பாணத்தில் மலை, மடு இல்லையென்று. யாழ்ப்பாண வீதிகளில் உண்டே'' என்ருர்.

எமது சீர்கேடுகளோ பல. தடைப் பாறைகளோ அனந்தம், எல்லாம் தகர்த்தெறிந்து பாதை காணப்பட வேண்டும். ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' என்பார்கள். வழி பிறக்கும். நாம் வாழ்வோம்.

சின்னக்குட்டி:
அண்ணை குருமாற்றத்தால நாட்டிற்கு ஏதும் நன்மை உண்டா?
சவாரித்தம்பர்:
மதகுருமார் மன மாற்றத்தால் நன்மை உண்டு.





● ப. நாகராசன், புத்தூர்.

கே: பெற்றோரை வயோதிபத்தில் வருத்தலாமா?

ப; தன் உதிரமே தனக்கு உபத்தீ வ ' தருகுதென்று உதிரக் கண்ணீர் வடிப்பார்கள்.

● செல்வி மாலதி கணேஷானந்தம், நல்லூர்.

கே: எமது நாட்டின் சுவாத்தியம் உமக்குப் பிடிக்குமா?

ப: மழையென்றால் கல்லை உருட்டும்; கோடையென்றால் கல்லை உருக்கும்.

● பரமேஸ்வரன், திருமலை.

கே: திருமணத்தின் போது ஏன் மாலை மாற்றப்படுகிறது?

ப; வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் வணங்குவதற்குக் கற்றுக் கொடுக்கும் பாடம். தலை வணங்கும்போதல்லவா மாலை இடப்படுகிறது.

● ஹனிபா, மட்டு நகர்.

கே; நம்ம நாட்டில் எது இல்லை? எது உண்டு?

ப; பொருளாதாரக் குறைவு பார்ப்பதற்கு பரிசோதகர் இல்லை. சுகாதாரக் குறைவு, பார்ப்பதற்கு பரிசோதகர் உண்டு.

● ப சிவநாதன், உடுப்பிட்டி.

கே; கலை உலகிற்கும், நிஜ உலகிற்கும் ஏதும் ஒற்றுமையுண்டா?

ப: கலை உலகில் உண்மை மேடை ஏறுகிறது, நிஜ உலகில் உண்மை பாடை ஏறுகிறது.

● மு. காண்டீபன், மாதகல்,

கே: மகுடியாரே... உமது மூளை அடைவிலா?

ப: தங்கமென்று நினைக்கிறீரா| என் மூளையை... நன்றி.

● சி. சிவனடியார், காரைநகர்.

கே: தமிழ்ப் பிரதேசங்களில் நீர் வீழ்ச்சியில்லையா?

ப; கண்ணீர், வியர்வை... இவை தான் எங்கள் நீர் வீழ்ச்சி.

---

அன்பிற்குரிய மகுடியாரே! டிசம்பர் மாத சிரித்திரனில் வத்தளைவிஜித்தாவின் 'நாம் ஏன் பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறோம்' என்ற கேள்விக்கு தாங்கள் கொடுத்த 'விதி என்னும் வீதியில் விபத்தில்லாது ஆண்டு ஒன்றை முடித்துக் கொண்டதற்கு எடுக்கும் விழா' என்ற பதில் மிக நன்றாயிருந்தது வெகுவாக மெச்சி பாராட்டத் தக்க பதில்!

அதற்குரிய (சிறு) ''பரிசுத் தொகை'' அன்புடன் இத்துடன் அனுப்பப்படுகின்றது.

வணக்கம்.

அன்புள்ள

கா. கந்தசாமி

---

● செல்வி உஷா கதிர்காமநாதன், சுண்டிக்குழி.

கே: ஒரு நாட்டின் நாகரீகத்தை அறிவது எப்படி?

ப: நூதன சாலையில்ல... வைத்தியசாலையில்... நோயாளிகளைப் பேணும் முறையில் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

● த. மனோகரன், வல்வெட்டித் துறை

கே: எவன் இலக்கிய முட்டாள்?

ப: கஞ்சிக்கலையம் காலியாயிருப்பவனுக்கு, காளிதாசன் கவி நயம் பேசுபவன்.

● செல்விகலாவதி பொன்னையா கரவெட்டி.

கே: வீட்டைக் கவனியாவித்தகன் யார்?

ப: அடுப்புக்கு விறகிருக்கிறதா என்று சிந்தியாது சிந்தனைச் சிறகில் மிதக்கும் கலைப்பித்தன்.

● சி. ஞானம், பரந்தன்.

கே: தமிழ் அறிஞர்களிடம் நீர் எதிர்பார்ப்பது என்ன?

ப: பொழுதுப் புழுதி படிந்த வரலாற்றில் புலனை விடுவதிலும் பார்க்கபுலரப் போகும்பொழுதில் புலனை விடுவது நல்லது.

● செல்வி வதினி தாமோதிரம், மானிப்பாய்.

கே: விடிவு விடிவு என்று கவிஞர்கள் மை வடிக்கிறார்களே தினமும் விடிவு வந்து தானே போகிறது?

ப: கறை நீங்கிய வைகறை வரவில்லையே!

★ சி. சிவகுமாரன், வேலணை.

கே: எமது பழக்கவழக்கங்கள் மாறிக்கொண்டிருக்கின்றதே?

ப; ஆம்! கல்யாணப்பந்தலில் பிளாஸ்டிக் பூக்களைப் பார்க்கிறோம். நாளை பிளாஸ்டிக் வாழையிலையில் பந்தி வைத்தாலும் வைக்கலாம்.

★ செல்விசுடர்விழி தம்பிராசா கட்டுவன்.

கே: மிருகமா? மனிதனா? மாமிசம் கூடுதலாக விரும்பி உண்ணுவது?

ப: மனிதன். ஜீரணமாகாத போதும்புலால் உண்ணுவான் பூனை ஜீரணமாகாத போது புல் தின்னும்.

★ த. தங்கராசா, மானிப்பாய்.

கே: மனிதன் முரண்பாடு மிக்கவன் என்கிறேன்?

ப உண்மை... 'அயலவனை அரவணை' என்ற தத்துவமும் அவனிடமுண்டு. அயலவனை

அழிக்கும் ஏவுகணையும் அவனிடமுண்டு.

★ சி. முத்துராசா, புத்தளம்.

கே: அன்றைய பெண்ணிற்கும் இன்றையபெண்ணிற்குமுள்ள வேறுபாடு என்ன?

ப: அன்றைய பெண் தொலைக்குப் போன கணவனுக்காக வழி மேல் விழி வைத்திருந்தாள். இன்றைய பெண் தொலைக்காட்சிக் கருவியில் விழி வைத்திருக்கிறாள் காட்சிக்காக.

★ க. பரணீதரன், காத்தான்குடி.

கே: பணத்தையா, தெய்வத்தையா? மனிதன் மேலாக மதிக்கிறான்?

ப: ஆண்டவனைத் தேடியா நம்மவர் அந்நியநாடு படையெடுக்கின்றனர்.

★ செல்வி ரஞ்சிதமலர் தம்பையா, கோப்பாய்.

கே: குணமில்லாதோரெல்லாம் குறள் பேசுகிறார்களே?

ப: சாத்தான் குறள், ஜெபம் செய்யும் காலமிது

★ ப. நந்தகுமார், வவுனியா.

கே: கற்பு இல்லாத ஆண்கள் மத்தியில் பெண் தனது கற்பைக் காப்பாற்ற முடியுமா?

ப: ஓநாய்கள் மத்தியில் கவரிமான் உயிர் வாழ முடியுமா.

★ சி. குமாரவேல், கல்முனை.

கே: சோம்பலும், சுயநலமும் கலந்த அரசியல்வாதி எப்படி இருப்பான்?

ப: கும்பகர்ணனைத் தூங்கிவிட்டு அறுவடை காலத்தில் அரிவாள் தூக்கி வருவான் அறுவடைக்கு.

★ க. தணிகாசலம், நீர்வேலி.

கே: பண ஆசை பிடித்தவர்க்கு இலக்கிய ரசனையில்லையா?

ப: இலக்கியம் இலட்சம் தேடுவதற்கு இடைஞ்சல் தம்பி.

★ சி. ஞானவேல், நெல்லியடி

கே: உலகத்தில் சமாதானம் எப்போது ஏற்படும்?

ப: அமெரிக்க அண்ணலின் இருதயத்தில் ஆத்மசுத்தி ஏற்பட்ட காலத்தில்.

● சி. கருணாகரன், அச்சுவேலி.

கே: தன்னைப் புழுகும் மனிதனைப் பற்றி உமது கருத்து?

ப: வெறுங்குடம் தனக்குமகுடம் சூட்டப்பார்க்கிறது.

□ கந்தவனம், தெல்லிப்பளை.

கே: முடியாதது எது?

ப: தோப்புக் கரணம் போட்டு மனைவிக்குத் தப்பலாம், குட்டிக் கரணம் போட்டு அரசியலில் தப்பலாம். எந்தக் கரணமும் போட்டு மரணத்திற்குத் தப்ப முடியாது.

□ செல்வி ராஜலட்சுமி கனகராசா, நல்லூர்.

கே: சரஸ்வதியும், லட்சுமியும் ஒரு இடத்தில் இருக்காது என்கிறார்களே?

ப: ஏன் இல்லை எம். எஸ் சுப்புலட்சுமியில் இருவரும் இருக்கிறார்கள். இசைவாணியாகவும் தனலட்சுமியுமாகத்திகழ்பவரல்லவா அவர். அந்த வாணி தனது தனத்தையெல்லாம் திருப்பணிக்கல்லவா வழங்கிய வண்ணம் இருக்கின்றார்.

□ கு. மாணிக்கவாசகர், கோப்பாய்.

கே: மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று விரும்புகின்றீரா?

ப: பழையன கழிதலும் புதியன புகுவதும் மறுமலர்ச்சியானால் அது முதலில் ஹோட்டல்களில் ஏற்பட வேண்டுமென விரும்புகிறேன்.

□ த. தம்பிராசா, மட்டுநகர்.

கே: எது மேலானது?

ப: சுடுகாடு சுரண்டல்சமுதாயத்திலும் மேலானது.

□ எஸ். எம். கலீல், கல்முனை.

கே: உழவுத் தொழிலா உளவுத் தொழிலா மேலானது?

ப: உழவுத் தொழில்தான் மேலானது. கலப்பைபிடித்தால்தான் அகப்பைக்கு வரும். அகப்பைக்கு வந்தால்தான் இரைப்பையுக்கு வரும், இரைப்பையுக்கு வந்தால்தான் உளவு பார்க்கலாமல்லவா.

□ த. சசிக்கலா, கொழும்பு.

கே: மனிதன் ஏழையானால்?

ப: உறவினரும், திருடனும், வருமானவரிப்பரிசோதகரும்தேடி வரமாட்டார்கள். தேர்தல் காலத்தில் வேட்பாளர் தேடி வருவார், அவரும் தேர்தல் முடிந்தால் மறந்திடுவார்.

● க. தவபாலன், அச்சுவேலி.

கே: இடியமின் ஹிட்லரை நினைப்பதுண்டா?

ப: ஏனில்லை... ''வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் மரபினில் யானொருவனன்றோ'' என்றல்லவா நினைத்துப் பாடுவார்.

□ ந. பரந்தாமன், மட்டுநகர்.

கே: கொலைகாரனுக்கு இருதயம் உண்டா?

ப: இருதய ரேகையாவது இருக்கத்தான் செய்யும்.

□ இ. ராதகிருஷ்ணன், பளை.

கே: இன்று எமது நாட்டின் நிலை என்ன?

ப: கலவர அகதி முகாம்களுக்கு மூடு விழா. வெள்ள அகதி முகாம்களுக்கு திறப்பு விழா.

□ சி. மணியம், சாவகச்சேரி.

கே: இரு துருவங்கள் யாவை?

ப: பணம் ஒரு துருவம், குணம் ஒரு துருவம்.

□ செல்வி மனோன்மணி மாணிக்கம், வரணி.

கே: இம்முறை யாழ்ப்பாணத்தில் உப்பு அமோகவிளைச்சலாமே?

ப: கண்ணீரில் கற்கண்டா விளையும்?

ஆதரவர்ளர் அன்பர்கள் அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ், புத்தாண்டு, பொங்கல்
வாழ்த்துக்கள்.

## தையல் கலைக்கு

- பலம் மிக்க நூல்
- பல காலம் நீடிக்கும் நூல்
- பல வர்ணங்களில் உள்ள நூல்

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரட்**
**மனுபக்சரிங் கம்பனி**
**கொழும்பு-12**

அமுது பொங்கும் ஆனந்தத் திருநாளில்
பொங்கலோ பொங்கலென்று
வாழ்த்துகின்றேம்.

## ராஜா புத்தக சாலை

பாடசாலை உபகரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள், உள் நாட்டு, வெளி நாட்டு, சஞ்சிகைகள், வாழ்த்து மடல்கள், கலண்டர், டயரிகள் அனைத்தையும்

ஒரே இடத்தில் சகாய விலையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**ராஜா புத்தகசாலை**
ராஜா அச்சகம்
அச்சுவேலி
அழகிய அச்சு வேலைகளுக்கு

**ராஜா அச்சகம்**

மொத்தமாக கொள்வனவு
செய்வோருக்கு விசேட கழிவுண்டு!

## படைப்பு

கடவுள்....
பொதுவுடமைவாதி....
மனிதன்
தனியுடமைவாதி.
கடவுள்
மண்ணைப்
படைத்தார்.
மனிதன்
மதிலைப்
படைத்தான்!

—வர்மன்



- என்னுடைய மகளுக்கு குரு மாறியிட்டுது!
- ☐ எப்படிப் பலன்?
- ரியூஷன் மாஸ்டர் மாப்பிளை யாவிட்டார்.



---

- சுங்க இலாகாவினருக்குள்ள பற்று என் சொந்த பந்தத்தினருக்கு இல்லை.
- ☐ ஏன் அப்படி சொல்லியிட்டீங்க?
- அந்நிய நாட்டிலிருந்து இந்த மண்ணில் கால் வைத்த போது அவர்கள் மட்டும் என்னைத் தழுவினர்கள்.

—குலம்

---

- வராதே... வெளியே போ... ஐயோ!
- ☐ மலர் தாலி கட்டிய கணவனை உனக்குத் தெரியவில்லையா?
- ஐயோ... தெய்வமே... என்னைக் காப்பாற்று!
- ☐ பயித்தியக்காரிமாதிரி அயலை அழைக்காதே... நீண்ட காலம் சவூதியில் இருந்தபடியால் கோலம் மாறியிட்டேன்.
- ஐயோ... கடவுளே எனக்கு ஒன்றும் புரியவில்லையே!
- ☐ பயித்தியம் என் கையில் இருந்த காயத்தைப்பார், முதுகில் இருந்த மச்சத்தைப்பார்.
- அத்தான்.

—குலம்

---

- ☐ என்ன வீடு வெறிச்சோடிப் போயிருக்கு?
- கணவன் வெறிகாரன் மனைவி ஓடிவிட்டாள்... வீடு வெறிச்சோடிப்போயிருக்கு.

— ஜோக்ரட்டீஸ்



# சிரித்திரன் அகராதி

இரகம்: மனிதனைப் பந்தாடும் விண் வெளிப் பந்துகள்.

பேனு: மனிதனின் இரண்டாவது நா.

சந்தை: பேரம் பேசி நேரம் கொல்லும் கால இடுகாடு.

கண்ணீர்: திரவியமில்லாத போது மனிதனின் கண்களிலிருந்து வடியும் ஓர் திராவகம்.

வீதி: மனிதன் வாகனங்களுடன் கிளித்தட்டு விளையாடும் மைதானம்.


முகமூடி: திருட வெட்கப்படுவோர் முகத்தைமூடி அணியும் மூடி.

மூக்குப்பொடி: மனிதன் சுவாசிக்கும் ஒரு வகைத் தூள்.

சவர்க்காரம்: மனிதன் துப்பரவில் அக்கறைகொண்டு கரையும் ஒரு புனிதப் பிறவி.

மீன்: தூங்கும் மனிதனுக்கு இரையாகும் தூங்காத ஜீவன்.

காகம்: வீதிச் சிலைகளின் உச்சி மீது அச்சமின்றி எச்சமிடும் பறவை.




● என்ன அண்ணுச்சி கவலை?
□ மகாவலிகங்கையாழ்ப்பாணம் வரமாட்டுதாமே!
● கல்லோயா பேர்த்தில் வருகுது... போதாதா...?

— அத்திமதுரம்

## ஏழை

உங்கள்
அருகில் வர
அருகதையில்லையென
என்னை
அருவருக்காதீர்கள் —
நீங்கள்
சுவைக்கும்
சிறு கதைகளின்
கதாநாயகன்
நான் —
பொருளில்லாவிடினும்
சிறு கதையின்
கருப் பொருள்
நான் —
வாழாவிடினும்
இலக்கியத்தை
வாழ வைப்பவன்
நான் —
உங்கள்
இருதயத்தில்
இடமில்லாவிடினும்
இரசனையில்
எனக்கு
இடமுண்டு.

—பூர்ணசந்திரிகா



## சிரிகதை

மேலே தரப்பட்டிருக்கும் படத்திற்கு ஒரு ''சிரி கதை'' எழுதி அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்படும் தரமான கதைக்கு ஆ. க. செல்வநாயகம் அவர்கள் ரூபா 25/- பரிசாக வழங்குகிறார்.

—ஆசிரியர்

# 'புலமைப் புலம்'

### இல. 2 கேள்விகள்

1. உலகில் வெளிவந்த நீளமான திரைப்படம் எது?
2. மோனேலிசாவின் மறு பெயர் என்ன?
3. பிரேசிலின் தலை நகரம் எது?
4. பிக்காஸோ (ஓவியர்) எந்த நாட்டவர்?
5. '10, பிராட்வே SW-1 லண்டன்' இந்த விலாசம் எந்த நிறுவனத்தினுடையது?
6. எந்த நாட்டு அஞ்சல் தலைகளில் அதன் பெயர் குறிக்கப்படுவதில்லை?
7. இரண்டாவது உலகப் போரில் கலந்து கொண்ட நாடுகள் எவை? (நேரடியாக)

### பதில்கள்

1. The Human Condition.
2. La Gioconda.
3. பிரேசிலியா முன்னர் ரியோடி ஜெனிரோ.
4. ஸ்பெயின்.
5. புதிய ஸ்கொட்லண்ட்யார்ட்.
6. இங்கிலாந்து.
7. ஐம்பத்தி ஏழு நாடுகள் (57).

—யுரேனஸ்

## பேனமிர்தம்



### காலத்திற்கொரு காலம்

புராண இதிகாசங்களைப் பாடும் இலக்கியங்களின் அவசியத்தைப் பற்றிக் கூறி அவற்றைப் படிக்க வேண்டும் என்று பறை சாற்றினோர் யாவரும் வெவ்வேறு காரணங்களைக் கூறினர். அதில் எதை நம்புவது? ,எதைப் பின்பற்றுவது? அதுதான் முடிவா? முதலாவதாக ''அவைகள் புண்ணியசரித்திரங்கள் அதனால் அவற்றை அறிய வேண்டும்'' என்றனர். இது திரு. மறைமலையடி காலமாகும். பின்னர் '' அவற்றில் உள்ள பாத்திரங்கள் கற் பாத்திரங்கள்; ஆகவே அவற்றைப் படிக்க வேண்டும்'' என்றனர். இது திரு. வி. கல்யாண சுந்தரனார் காலம். அடுத்தபடியாக ''அவ்விலக்கியங்களிலே காவிய ரசம், கலை உணர்வு, பண்பாடுகள் சொட்டுகின்றன. இதனால் அவற்றைப் படிக்க வேண்டும் என்றனர். இது திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் காலமாகும். இதனை இன்னும் சிலர் வேறு மொழிகளிலே கூறுவர். அதாவது ''அவைகளிலேயுள்ள பாவத்திற்காகப் படியுங்கள்'' என்றனர். இது டி. கே. சிதம்பரநாத முதலியார் காலம். இவை யாவற்றையும் கடந்து ''மேலே கூறப்பட்டவைகட்காவது படிக்காவிட்டாலும் அவைகளிலுள்ள நீதிகட்காகப் படியுங்கள்'' என்றனர். இது திரு. சோமசுந்தர பாரதியார் போன்ற புராணமும் பகுத்தறிவும் கலந்தோர் காலம்.

—பேரறிஞர் அண்ணா

தொகுத்தவர்: 'சுவர்ணகேசரி'

## MRS டாமோடிரன்



Mrs. டா; டார்லிங்... தைப்பொங்கலுக்கு நான் பயித்தியம் பணியாரம் செய்யப் போறேன்.

Mr. டா: வட் இஸ் பயித்தியம் பணியாரம்!?

Mrs. டா; போளியெல்லாம் வெல்ட் பண்ணின மாதிரி ஒரு பலகாரம்.

Mr. டா: ஹி.. ஹி... அது பயித்தியம் பணியாரம் இல்லே பயித்தம் பணியாரம்

Mrs டா: ஓ..ஐ...சீ... ஐயாம் சொறி...



## மைனர் மச்சான்

மைனர்: என் காதலுக்கு என்ன பதில் சொல்றீங்க?

பெண்: அந்நிய நாட்டில் போய் 5 லட்சம் உழைத்து வாங்க... பதில் சொல்கிறேன்.

—மாயன்

- மரணத்தின் பிடியில் என்ற நாவல் பரிசு பெற்றவர் இப்போ மரணப் பிடியில் இருக்கிறார்.
- ஏன்... என்ன நடந்தது?
- 10,000முதல்பரிசு தனக்கென்று கேள்விப்பட்டதும் ஏங்கிப்போனார்.

—குலம்

★ ★

## சங்கீதச் சிரிப்பு

- அந்த சங்கீத வித்துவான் உள்நாட்டு உற்பத்தியை ஆதரிப்பவர்.
- ஏன்
- அவர் எஸ் லோன் பைப்பில்தான் புல்லாங்குழல் வாசிப்பது.

—மாயன்

★ ★

- எங்க வேலி வழக்கு தீர்ந்தபாடில்லே... வழக்கில் பணம் விரையமாகுது.
- பார்த்தசாரதியை நாடுவது நல்லது.

★ ★

- அப்பா இம்முறை பரீட்சையில் நல்ல முடிவை எதிர்பாராதையுங்க.
- என்னடா பிதற்றுறாய்!?
- குருமாற்றம் என்னைப் பாதித்துவிட்டது... என் குருசவூதிபோயிட்டார்.

★ ★

## ADULTS ONLY

- என்ன அறை வாசலில் 'அடல்ஸ்ஒன்லி' போர்ட் மாட்டியிருக்கிறாய்?
- ரீ.வி. அறையிலிருக்கு... சிறிசுகள் ரீ.வி. பார்ப்பதை நான் விரும்பவில்லே.

—குலம்




## முக்கிய குறிப்பு

நாளுக்கு நாள் ஏராளமான விண்ணப்பங்கள் வருகின்றன அத்துடன் ஒரு முறை பிரசுரித்த பின்னும் மீண்டும், மீண்டும் விண்ணப்பிக்கிறார்கள். ஒரு சிலர் பல்வேறு விலாசமிட்டு அனுப்புகிறார்கள் இதனால் ஒரு சிலரது விண்ணப்பமே மீண்டும்மீண்டும் பிரசுரிக்கப்படுகிறது இதனால் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக 5/- ரூபா முத்திரை இணைத்து அனுப்பும் விண்ணப்பமே பிரசுரிக்கப்படும்.

Sherman 23
Spco Room No. 96, P. O. 2211.
Dammam-31451, Saudiarabia.
☐ T.V., Video, Pen pals, Photogrophy, Novels.

S. Somasundar 30
P.O. Box 2464, Dammam,
Saudiarabia.
● operator
☐ T.V., உதை பந்தாட்டம், சினிமா, கதைப் புத்தகம், பேனா நண்பர்.

Salooni Iyoob 19
Middele Street, Erukkalam piddy-5.
● Student
☐ T.V., Reading, Pen Pals, Beach.

செல்வன் ப. கைலைநாதன் 19
'கௌரி வாசா', பொன்னாலை,
சுளிபுரம் (P.O.)
● மாணவன்
☐ வானொலி, பத்திரிகை, பேனா நண்பர்.

T. Suthaharan 20
'Fareedha Manzil' Main Street,
Erukkalam piddy-6.
● மாணவன்
☐ முத்திரை சேகரித்தல், பேனா நட்பு, கதை, கட்டுரை எழுதல், T.V., அரசியல்.

கோ. கண்ணதாசன் 15
வெள்ளாங் குளம், மன்னார்.
● மாணவன்
☐ வானொலி, பத்திரிகை, T.V.

நா. தவராஜா, C/o வே. நாகலிங்கம் 24
7ம் வட்டாரம், ஊரைதீவு,
புங்குடுதீவு.
● கடை
☐ வியாபாரம், உடற் பயிற்சி, வானொலி.

### சிரித்திரன் பேனா நண்பர் கழகம்

பெயர்.................................................

விலாசம்.................................................

தொழில்.......................... வயது..............

பொழுது போக்கு.................................................

இத்துடன் ரூ. 5/- முத்திரை இணைத்துள்ளேன்.

கையொப்பம்.......................... திகதி..............



டோக்கிளாஸ்:
எனது கடன்கள் எல்லாம் கடவுள் செயலால் நீங்கிவிட்டன!
தியாகர்:
அதெப்படி? லொத்தரியில் ஏதும் திசை அடிச்சுதா?
டோக்கிளாஸ்:
இல்லை கடன்கள் தந்தவர் நேற்று இறந்து விட்டார்.

—சங்குவேலி கா. க.

புது முகம்: ஏய்! இந்த ரோட்டு எங்கே போகுது?
பையன்: அது இருந்த இடத்தில்தான்நெடுக இருக்குது. இனியும் எங்கேனும் போகும் என்று நான் நினைக்கவில்லை.

—சங்குவேலி கா. க.

### இரத்தல்

பறவைக்கும்
கையுண்டு —
இறக்கை:
இறக்கையால்
அது
இரப்பதில்லை.

—வர்மன்

பசித்தவனுக்குச் சோறு தர முடியாத சமயம் இறந்தவனுக்கு மோட்சம் தராது.

— சுவாமி விவேகானந்தர்

# முள் முடி

'செம்பியன் செல்வன்'

இயேசு ஒலிவ மலையினின்றும் கீழிறங்கி வந்தமர.

பாதையில் சிதறிக் கிடக்கும் பருக்கைக் கற்களுக்குக்கூட துன்பம் நேரக்கூடாது என்பது போல் மென்பாதம். காற்றில் அசையும் தோகை எனத் தவழ்ந்தது.

புனிதரின் கள்ளங்கபடற்ற விழிகளில் களிப்புத் துள்ளியது. பார்க்குமிடமெல்லாம் பரம பிதாவின் கைத்திறனின் கலைக்கோலங்கள் தேவகுமாரன் பாத்தியதை உள்ளதைத் துய்க்கும் அவாவிலும் ஆசைப் பெருக்கிலுமாக...

திடீரென அவர் நடை சாத்தான் எதிர்ப்பட்டதெனத் தறித்தது:

கற்பாறைகள் நிறைந்த அந்தப் பெருவெளியில் அவர் மீன்விழிகள் பதிந்த போது, நெஞ்சினின்றும் குருதி கொப்புளித்தது.

கொடுமை மனிதாபிமானம் கழுவிலேறியதாக மனம் துடித்தது.

கூந்தல் அவிழ்ந்து தொங்க ஒரு கையை நிலத்தில் ஊன்றியவாறு சரிந்த மல்லிகைச் சரமாகி விழுந்து கிடந்தாள் ஒரு பெண். அவள் மீது கூடியிருந்த கூட்டம் ஒன்று மலைப் பிஞ்சுகளால் விட்டெறிந்து கொண்டிருந்தது. மலரைக் கல்லால் அடிக்கும் வெறி என்ன?

பாதங்கள் உதிரம் சிந்தச் சிந்த இயேசு வேகமாக அவ்விடத்தை நோக்கி நடந்தார். எத்தனை... எத்தனை சிலுவைகள் நெஞ்சப் பதைப்பு அதிகரித்தது.

'பரிசேயரே என்ன இது? ஏன் இந்தக் கொடுமை'

போதகரே! இந்த ஸ்திரி விபசாரத்திலீடுபடும் பொழுது கையும் மெய்யுமாகப் பிடிபட்டாள்...'

'அப்படியா! விபசாரத்துக்கு துணை நின்றவன் யார்? அவன் எங்கே?'

— பரிசேயர் அதிர்ந்தார்; விபசாரத்திற்காக ஆண்களைத் தண்டிக்கும் வழக்காறே இல்லையே. அதுவுமின்றி அந்த ஆண். ஒரு பிரபுவாயிற்றே. இந்தப் போதகரே எப்போதும் இப்படித்தான். புதிய புதிய சிந்தனைகளால் எங்களைச் சித்திரவதைப்படுத்துகிறார். மக்களை தன்வயப்படுத்தி புது மார்க்கம் ஒன்றையே சமர்ப்பிக்க முற்படுகிறார். இவர் மிகவும் ஆபத்தானவர்.

பரிசேயர் சாமர்த்தியமாகப் பதிலளித்தார்.


'அவன் தப்பி விட்டான். இவள் அகப்பட்டாள்.'

'அதற்காக... அகப்பட்ட குற்றத்திற்காகவா இந்தத் தண்டனை. அகப்படாதவரை குற்றங்கள் மன்னிக்கப்படலாமா?'

—பரிசேயர் மீண்டும் அதிர்ந்தார்.

—'போதகர் பொல்லாதவர். இவரை எப்படியும் மடக்கியாக வேண்டும்; இல்லாவிட்டால் எங்களுக்குத்தான் ஆபத்து.'

'போதகரே! நீர் என்னதான் சொல்கிறீர்? இவளைத் தண்டிக்க கூடாது என்கிறீரா?' —என்றவாறு கூட்டத்தைப் பார்த்தார் அவரின் உள்ளம் குதூகலத்தால் குதித்தது. இயேசு தடுமாறப் போகிறார். அவரது கருணை உள்ளம் இந்தச் சித்திரவதையை ஏற்காது மறுத்துரைப்பார். அது மோசேயின் நியாயப் பிரமாணத்துக்கு மாறாக அமையும். மக்கள் முன்னால் மதிப்பிழந்து விடுவார். —இயேசு நீண்ட அங்கி நிலத்தில் தோய, ஒரு பாறையில் அமர்ந்தார். குனிந்து தரையில் குச்சி



தந்தை; கல்வியில் ஒன்றுமில்லை

ஆசிரியர்: ஏன் அப்படிச்சொல்லுறீங்க?

தந்தை; இங்கே படிப்பிற்குக் குறைய ''மார்க்ஸ்'' வாங்கிய என் மகன், ஜேர்மனியில் வேலைக்கு நிறைய ''மார்க்'' வாங்குகிறான்.

— அதிமதுரம்

ஒன்றினுல் கோலம் போல எத னேயோ வரைந்தார். அவரின் செவ்வுதடுகள் மௌனத்தின் கனி யாக சொற்களை உதிர்த்தன.

'உங்களில் பாவமில்லாதவன் எவனுருவனே அவன் இவள் மேல் முதல் கல்லை விட்டெறியக் கடவன்'

பாலே மனங்கள் அதிர்ந்தன.
நிசப்தத்தின் வித்தா?
சொல்லின் கனமா?
பொருளின் முற்றுகையா?
உண்மையின் உயிரா?
நெஞ்சத்தின் சாட்சியா?

இயேசு நிமிர்ந்தார்.

அவளேயும் அவரையும் தவிர்த்து எல்லாரும் கலேந்திருந் தனர். அவள் அவர் காலடியில் அமர்ந்து விம்மினுள்.

'மகளே விபசாரம் செய்யா திருப்பாயாக!'

—அவர் நடந்தார்,

## 2

காலம் கடந்தது.

இயேசு மீண்டும் அப்பாதை யில் நடந்துவந்தபோதுபாதையை பரற்கற்கள் வழிமறித்தன. மக் கள் சிரமத்துடன் நடமாடிக் கொண்டிருந்தனர்.

'ஏன் இப்படிப் பாதைகள் பராமரிப்பற்றுக் கிடக்கின்றன?'

'போதகரே! கற்களை காணும் போதெல்லாம் நாம் எங்களேக் குற்றவாளிகளாகக் காண்கிறேம் கற்கள் புனிதமடைந்துவிட்டன. நாங்கள் பாவிகளாகிவிட்டோம். எனவே புனிதக் கற்களைத் தொட வும் அஞ்சுகிறேம்.

இயேசு சிந்தனையிலாழ்ந்தார்.

'மனிதன் திருந்துமளவிற்கு சந்தர்ப்பம் அளிக்குமளவில் கற் களினுல் தண்டனே அளியுங்கள் அதனுல் மோசேயும் திருப்தியடை வார். சமூக விரோதிகளேத் தண் டியுங்கள்!' என்றுர் சவுக்கடி வீர ரான இயேசு.

மக்கள் தலே வணங்க, அவர் வழி நடந்தார்.

## 3

அவரது யாத்திரை புவியின் உருண்டையை உறுதிப்படுத்தி யது; பழைய பாதை; புதிய தோற்றம்.

ஒரு சில வீடுகளின் முன்னுல் கற்கள் குவிந்திருந்தன. யன்னல்' கூரைகள் நொருங்கியிருக்கத் தெரிந்தது.

'இவை யாருடைய இல்லங் கள்? ஏன் இப்படி?'...

'அரசியல் வாதிகளினதும்... உணவுக்களஞ்சியப் பொறுப்பதி காரிகளினதும் இல்லங்கள்...இவர் கள் மக்களின் அடிப்படைத் தேவைகளில் மோசம் செய்த வஞ் சகர்கள்... அவர்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொரு மோசடிகளே யும் நியாயப்படுத்தி விடுகிறுர்கள். ஒருவன் மனிதனின் உணவில் மோசம் செய்ய... மற்றவன் உரி மையில் மோசம் செய்கிறுன்... அதனுல்தான் இந்த இல்லங்கள் இப்படிக் காட்சி தருகின்றன.

—மக்கள் விழித்துக் கொண் டார்கள் என்ற பூரிப்பில் நடந் தார்.

## 4

அதே இடம் சில ஆண்டு களின் கழிவு.

பல அழகிய மாட மாளிகை கள்; தொங்கு தோட்டங்கள்; குளிர் நீரூற்றுக்கள் சுற்றி வளேத்த மதில் சுவர்கள். காவற்காரர்கள்.

இயேசுவுக்கு ஆச்சரியம்! கற்கள் வீசப்பட்ட பாவிகள் புனி தர்களாகிவிட்டனரா?

எவரும் அவருக்குப் பதிலளிக் கவே அஞ்சினர்.

ஏன்?... ஏன்?...

ஒரு துணிச்சல்கார இளேஞன் அவருக்குக் காதோடு காதாகப் பதிலளித்தான்.

'பெரிய இடத்து விசயம்... ஏன் வீண் பொல்லாப்பு' வாயைத் திறந்தால் வாழ்நாள் முழுவதும் மூடமுடியாது போய்விடும்... மக் கள் எறிந்த கற்களாலேயே மாளி கைக்கு அத்திவாரம் போட்ட வீரர்கள்... இவர்களே இன்று ஊர்ப் பிரமுகர்கள் நீண்ட நேரம் இங்கே நிற்காதீர்கள்... கள்ளன் என்று குற்றம் சாட்டிவிடுவார்கள் போய்விடுங்கள்... என்று கூறி விட்டு ஓடி மறைந்தான்.

இயேசுவின் தலேயில் பாரிய 'முள் முடி' இறங்கியதாகத் தெரிந்தது.

— • —



வாடிக்கையாளர்: நீங்கள் கடை வியாபாரத்தை விட்டு விட்டு நாட்டிய ஆசிரி யராகப் போனு லென்ன?

கடைக்காரர்: ஏன்?

வாடிக்கையாளர்: தராசை தில் லானுஆடவைக் கிறீங்களே!

—அதிமதுரம்

# பொருத்தங்கள்

ச. பத்மநாதன்

காலை உணவை முடித்துக்கொண்டு உறவினர் ஒருவர் அனுப்பி வைத்த விவாகப் பொருத்தமொன்றைக் கணித்துக் கொண்டிருந்தேன்.

வெளியே என் மனைவியுடன் யாரோ கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

புதிய குரலாய் இருந்ததால் யாரென்று அறியும் ஆவலில் 'ஹோல் யன்னலூடாக எட்டிப்பார்த்தேன்.

கதைத்த குரல் எட்டாம் கட்டையடிக் கந்தையரின் மகன் நாகராசாவினுடையது.

அவன் கையிலிருந்த பயிற்சிக் கொப்பி அவன் பொருத்தம் பார்ப்பதற்கு வந்திருப்பதை ருசுபடுத்தியது.

பொருத்தம் பார்த்துக்கொண்டு போக வழக்கமாக கந்தையர்தான் வருவார். இம்முறை நாகராசா வந்திருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. யன்னலருகில் நின்றவாறே நான் கேட்டேன் ''என்ன தம்பி... பொருத்தம் பார்கவே வந்தனீர்''

என்னைக் கண்டதும் அருகில் வந்து குறிப்புக் கொப்பியையும் இரண்டு குறிப்புத் துண்டுகளையும் நீட்டியபடி அவன் சொன்னான் ''அம்மா இந்த இரண்டு குறிப்புகளும் தங்கச்சிக்குப் பொருந்துதோ எண்டு பார்த்துக் கொண்டு வரச் சொன்னவ''

''ஏன் கந்தையா அண்ணர் வரவில்லை... ஏதும் சுகயீனமே...'' நான் கேட்டேன்.

அவன் ஒரு கணம் தயங்கிய பின் சொன்னான். ''உங்களிட்டைப் பொருத்தம் பார்த்துப் போட்டு ஒண்டும் பொருத்தமில்லையெண்டு வீட்டிலே வந்து சொல்கிறார். அதுதான்...''

தான் எழுப்பிய சந்தேகத்துக்குரிய விடையை என் முகத்தில் தேடுவதைப் போல் என்னைப் பார்த்தான்.

நான் பார்த்து வைக்கிறேன். பின்நேரம் கந்தையா அண்ணரை ஒருக்கா வரச்சொல்லி விடும் என்றேன் நான்.

தயங்கியபடியே அவன் திரும்பிப் போனான்.

சொல்லியனுப்பியபடி அன்று மாலை கந்தையர் வந்தார்.

இரண்டு குறிப்புகளில் ஒன்றை அவரிடம் கொடுத்துவிட்டுச் சொன்னேன்.

''நட்சத்திரம் தொடக்கம் வேதை வரையான பத்திலை எட்டுப் பொருத்தம் உத்தமம். பொடியன்றை மிகத் திறமான சாதகம். இதை எப்பிடியும் செய்து போடுங்கோ...''

கதிரையில் இருந்த கந்தையர் என்னை நிமிர்ந்து பார்த்தார். அவர் முகத்தில் கவலை ரேகைகள்.

''தம்பி சாதகம் பொருந்தி என்ன செய்கிறது. இந்தச் சம்பந்தத்திற்கு ஐம்பதினாயிரம் காசும் வீடு வளவும் நகையும் கேக்கினம். இருக்கிற வீட்டை மூத்தவளுக்குக் குடுத்திட்டம். தோட்டத்தை வித்து எண்டாலும் காசைக் குடுக்கலாம். வீட்டுக்கு எங்கை போறது?''

அவர் முன்னர் பார்த்துக்கொண்டு போன குறிப்புக்கள் பொருத்தமில்லையென்று சொன்னதற்கான காரணம் இப்போது எனக்குப் புரிந்தது. என்றாலும், அவர் என்ன சொல்கிறார் என்பதை அறிவதற்காகக் கேட்டேன். சாதங்கள் பொருத்தமில்லையெண்டு இதுக்குத்தானே வீட்டிலை சொன்னீங்கள்?

அவருக்குக் கண் கலங்கியது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அவர் சொன்னார்.

''வீட்டுக்காரருக்கு என்ன தம்பி... சாதகம் பொருந்தினால் சரியெண்டு நினைக்கினம். ஆனால் இந்தக் காலத்திலை முக்கியமான பொருத்தம் சீதனந்தான். சீதனப் பொருத்தம் சரி வரும் வரை வீட்டுக்காரருக்கும், சொந்தக்காரருக்கும் சாதகம் பொருந்தயில்லையெண்டு பொய் சொல்லித்தான் சமாளிக்க வேண்டி இருக்குது என்னாலை வேறை என்ன செய்ய ஏலும் தம்பி...''

அதற்குமேல் பேச முடியாமல் அவரின் கம்மிய குரல் அடைத்துப் போயிற்று.

அவருக்கு ஆறுதல் கூறுவதற்கு நான் வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருந்தேன்.

—●—

---

சடை நாய்க்குட்டி; அம்மா குளிருது.

தாய் நாய்: ஆடையில்லா சினிமா நடிகைக்கு குளிரவில்லையாம்... உனக்கா குளிருது!

—அதிமதுரம்



◘ தமயந்தி: சிரமத்தின் மத்தியில் நீங்கள் சமைத்து விருந்து போட வேண்டாம்!

◘ சாவித்திரி: உங்களுக்குப் பைத்திய மா......... ஷோபாஸ் ஏஜன்ஸீஸ் லிமிட்டட் பக்குவமாகப் பைக்கட் செய்த மா, தூள், சரக்கு வகைகள் பக்கத்திலிருக்க சமையல் வேலை ஒரு உல்லாசப் பொழுது போக்கல்லவா!

- கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்கள் தரமுள்ள எங்கள் தயாரிப்பையே பயன்படுத்துகின்றன.
- மிளகாய்த் தூள், கறிச்சரக்குத் தூள், மோர் மிளகாய், அரிசி மா, ஆட்டா மா, குரக்கன் மா, மற்றும் பல கறிச்சரக்குத் தூள் வகைகள்—எல்லாம் உறுதியான பைக்கட்டுகளில் நிறைவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
  - சத்தானவை
  - சுத்தமானவை
  - சிக்கனமானவை.
- **L. P. GAS** — சுண்ணுகை வட்டாரமக்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- குறைந்தவிலையில் நிறைந்த பைக்கட்டுகளில் உயர்ந்த தரம் – ஷோபா ஏஜன்ஸீஸ் லிமிட்டட் ஸ்தாபனத்தாரின் தயாரிப்புகளே.

194, K. K. S. ROAD, CHUNNAKAM.

SHOBA

## அவளும்.... அவனும்.... நானும்....

அந்தச்சிறுமிக்கு பத்து வயது இருக்குமோ?
இருக்கலாம் போலிருந்தது.
எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் அதிகாலே
நாலரை மணிக்கெல்லாம் வேலேக்கு வந்து விடுவாள்.
— பாத்திரம் கழுவுவது...
— வீடு கூட்டுவது...
— துணிகள் துவைப்பது...
— குழந்தை பார்ப்பது... இப்படிப் பம்பரமாகத்
தன் சக்திக்கு... வயதுக்கு மீறி வேலேகள்
செய்வாள்.
பார்க்கப் பரிதாபமாக இருக்கும்
படித்து முன்னேற வேண்டிய வயது...
பள்ளிக்கூடத்துக்கு பிள்ளேகள் போகும் போது
குழந்தையைச் சுமந்தபடி ஏக்கத்தோடு
பார்த்துக் கொண்டிருப்பாள்.
— ஒரு நாள் கேட்டேன்
''உனக்கு எவ்வளவு சம்பளம்?''
''தினம் மூன்று ரூபாவுங்க''
''உனக்கு படிக்க விருப்பமில்லேயா?''
''விருப்பமுங்க... ஆனு வேலே செய்ய வேணுங்களே''
''நீ...தான் உழைக்க வேணுமா?''
''ஆமாங்க... நான் உழைத்துக் கொண்டு போய்
எங்கப்பா குடிக்கிறது காசு கொடுக்கணும்
இல்லாட்டி அது சுகமில்லாத எங்க ஆத்தாவை
அடிச்சே கொன்று போடுங்க...''
— நெஞ்சில் சுருக் கென்றது.
எனது இருபது வயது மகன் என்னிடம்
புது லோங்ஸ் வாங்க 200 ரூபா காலேயில்
கேட்டதை நினேத்தபடி நகர்ந்தேன்.

—''மௌனு''

பெய்யாத மழை பெய்யத் தொடங்கியதும்
மண்ணின் மணம் வெளிப்படுகிறது
சேராத பணம் சேரத் தொடங்கியதும்
மனிதனின் நாற்றம் வெளிப்படுகிறது.

—''யாரோ''

### ஆயிரத்தில் ஒரு மொழி

இரு பெண்களே ஒற்றுமையாக்குவதை விட
ஐரோப்பா முழுவதையும் ஒற்றுமையாக்கி
விடலாம்.

—14-ம் லூயி மன்னன்

## சங்கநாதம்

நுளம்பு
சங்கநாதம்
செய்தது.
''நான்
வீர மரணத்தை
அரவணேப்பவன் —
நான்
கோழை யல்ல —
விலங்கிடப்பட்ட வனின்
முதுகில்
இரத்தம்
குடிப்பதற்கு''

—வர்மன்

## ஏற்றத்தாழ்வுகள்

பாதையில் நடந்து போவோர்
காரில் போவோரை திட்டுவதும்:
காரில் செல்வோர் பாதசாரிகளேத்
திட்டுவதும் வியப்பில்லே.
ஆனுல்—
ஒரே ஆள் நடந்து செல்லும் போது
காரில் போவோரை திட்டுவதும்
காரில் போகும் போது
பாதசாரிகளேத்
திட்டுவதும்தான் வியப்பு.

முத்தமிழ்காவலர்:
கி. ஆ. பெ. விசுவநாதம்

## சங்கீதச் சிரிப்பு

''நான் டாக்டராக வேண்டுமென்று சின்ன வயதில் ஆசைப்பட்டேன். என் அப்பாவோ நான் வக்கீலாக வேண்டும் என்று எதிர்பார்த்தார். என் அம்மா மட்டும் நான் சங்கீதத்தில் புகழ் பெற்று விளங்க வேண்டுமென்று விரும்பினுள். அதுதான் நிறைவேறிற்று!" என்று சொல்லிவிட்டு ''அங்கே ஆபரேஷன் தியேட்டரில் அறுவை செய்வதற்குப் பதில் மேடையில் அறுவை செய்கிறேன். கோர்ட்டுக் கச்சேரிக்குப் போவதற்குப் பதில் பாட்டுக் கச்சேரிக்குப் போகிறேன்.''

—சேஷகோபாலன்

# ★ திரைத் திராட்சை ★

— கலைவாதி கலீல் —

ஹிந்திப்படமொன்று. 'நயா தௌர்' என்று பெயர் தமிழில் 'பாட்டாளியின் சபதம்' என்ற நாமத்துடன் 'டப்' செய்யப்பட்டது. அதாவது படம் அப்படியே இருக்க, உரையாடல்களும் பாடல்களும் மட்டும் மொழி மாற்றம் செய்யப்பட்டன. எமது நாட்டில் இந்தப் படம் ஜனரஞ்சகக் காட்சிகளாக, வெற்றிகரமாக ஓடியது. அதற்குப் பல காரணங்கள்.

இந்தியத் திரையுலகின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த திலீப்குமார் படத்தில் ஆடிப்பாடித் துள்ளித் துடித்து, சண்டை போட்டு நடித்திருந்தார். ஒரு காலத்தில் ஹிந்திப் படவுலகில் கொடிகட்டிப் பறந்த வைஜயந்திமாலா படத்தில் கதாநாயகியாக நடித்தார். பழம்பெரும் நடிகர் ஜீவன் வில்லனாகத் தோன்றினார். கட்டுமஸ்தான கம்பீரத் தோற்றமுடைய அஜீத் முதலில் திலீப்குமாரின் நண்பனாகவும், பின்னர் அவரது எதிரியாகவும் தோன்றினார். ஜொனி வாக்கர் வேறு மிகப் பிரமாதமாக நடித்திருந்தார். படத்தின் கதையோ மிகவும் புரட்சிகரமானது. தனக்கெனத் தனிப்பாணி வகுத்து இசையமைப்பதில் வல்லவரான ஓ பி. நய்யார் படத்தின் பின்னணி இசைக்குப் பொறுப்பாக இருந்தார். பாடல்கள் அத்தனையுமே தேன் பாகுதான். முணு முணுக்காத உதடுகளே இல்லை. 'சாம்பிளுக்குச் சில,

'வாராய் நீயே வா... போற்றி வா...'
'உந்து முகில் சுருள் எனும் உன் கூந்தல்'
'வாழ்க வாழ்க பாட்டாளியே...'
அங்கியோடு நிஜாரணிந்து வந்தாயே'
நான் பம்பாயின் பாபு... என்பேரே தில்லானா'

பிறகென்ன, படத்தின் வெற்றிக்குக் கேட்கவா வேண்டும். படத்தில் அலுப்புத்தட்டும் காட்சிகளோ... ஊஹூம். ஒவ்வொரு ஃபிரேமும் பெறுமதியானது. நெறியாழ்கை மிகப் பிரமாதம்.

கதை இதுதான்.

அது ஒரு குக்கிராமம். வாகனங்கள் இல்லை. குதிரை வண்டிகள்தான். புகையிரத நிலையத்தில் வந்திறங்கும் கிராமவாசிகளை கிராமத்துக்கு ஏற்றிச் செல்வது அந்த வண்டிகள்தான். அந்தக் கிராமத்தின் பிரதான தொழில் அதுதான் திலீப்குமாரும் ஒரு வண்டியோட்டி அந்த ஊர்ப் பிரமுகரின் மகன் ஜீவன் வெளிநாட்டில் படித்துவிட்டு ஊர் திரும்புகிறான். பின்தங்கிய அந்த அமைதியான ஊரில் ஒரு மரக்காலை நிறுவுகிறான். ஊர் இயந்திரமயமாகுறது.

திலீப்பின் காதலி வைஜயந்திமாலா மீது ஜீவனுக்கும் ஒரு கண். திலீப்பின் உயிர் நண்பன் அஜீத்தும் வைஜயந்திமாலாவை விரும்புகிறான். திலீப் சதி செய்து வைஜயந்தியைக் கைப்பற்ற முயல்கிறான் என்று தவறாக எடைபோட்டு திலீப் மீது பகை கொள்கிறான். அஜீத் திலீப்பை வஞ்சம் தீர்க்கவும் எண்ணுகிறான். ஜீவனோ திலீப்பின் மீது வெறுப்புக் கொள்வதோடு பரம்பரை பரம்பரையாகச் சோறு போட்ட குதிரை வண்டியின் பிழைப்பிலும் மண் போட முனைகிறான். போட்டியாக நவீன 'பஸ்' ஒன்றை கொண்டு வருகிறான். குதிரை வண்டிக்கும் பஸ்ஸுக்கும் போட்டி மக்கள் பஸ்ஸையே நாடுகின்றனர். குதிரை வண்டிக்காரர்களின் பாடு திண்டாட்டமாகிறது. சோற்றுக்கே தாளம் போடவேண்டிய நிலை. ஜீவன் அவனது தந்தையின் சொல்லைக்கூடக் கேட்காமல் பஸ்ஸை வைத்துக்கொண்டு அட்டகாசம் போடுகிறான். இறுதியில் ஓர் உடன்படிக்கை ஏற்படுகிறது. பஸ்ஸுக்கும் குதிரை வண்டிக்கும் போட்டி தோற்பவர் தொழிலை விட்டுவிட வேண்டும். எல்லை தீர்மானிக்கப்படுகிறது. போட்டி நடைபெறுவதற்கு முன் திலீப்பும் பாட்டாளிகளும் சேர்ந்து புதிய பாதை ஒன்றை உருவாக்குகின்றனர். இடையில் ஒரு பாலம் வேறு அதையும் அமைக்கின்றனர். போட்டிக்கு முதல் நாள் திலீப்பைத் தோற்கடிப்பதற்காக அவனது பழைய நண்பன் அஜீத் மரப் பாலத்தை வாளினால் அறுக்கிறான். பின்னர் தவறை உணர்ந்து அதனைத் தன் தோளினால் தாங்கி திலீப்பின் குதிரை வண்டி அதன் மேலால் ஓடுவதற்கு இடமளிக்கிறான். வழமையான வீதியால் ஜீவனின் பஸ்... புதிய வீதியால் திலீப்பின் குதிரை வண்டி இறுதியில் நேர்மையும் உண்மையான உழைப்புமே வெல்கிறது. ஆம்! குதிரை வண்டியே வெல்கிறது. ஜீவன் தோல்வியை ஒப்புக்கொண்டு திருந்திவிடுகிறான்.

படத்தின் பிரதான நோக்கம் உழைப்பின் மகிமை



துறவி; ஏனப்பா துறவியாக விரும்புகிறாய்?

ஒருவர்: குடையைத் துலைத்தால் வீடு வர வேண்டாமென்று சொன்னவள் என் மனைவி.

யும் தொழிலாளர் ஒன்று படுவதனால், எந்த மாபெரும் எதிர்ப்புச் சக்திகளையும் முறியடிக்கலாம் என்ற யதார்த்தமும் தெளிவாகச் சொல்லப்படுவதே. அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார் டைரக்டர்.

படத்தில் ஒரு காட்சி,

''மோட்டார் இயந்திரத்துடன் அதாவது பஸ்ஸுடன் போட்டி போட முடியாது என்பதை உணர்கிறான் திலீப். புதிய வீதி ஒன்றை உடனடியாக அமைத்தால் தான் வெல்லமுடியும் என்பதை உணர்ந்து கல்லுப் பாறையாக இருக்கும் அந்த நிலத்தில் பாதை போட முயல்கிறான் ஊரார் ஒத்துழைப்புத் தர மறுக்கின்றனர் கடப்பாறையுடன் தன்னந்தனியனாகச் செல்கிறான். மண்ணை வெட்டிக் கூடையில் போடுகிறான். கூடை நிறைந்ததும் தூக்குவதற்கு நிமிர்கிறான். ஆனால் அங்கே இரண்டு வளைகரங்கள் கூடையைப் பற்றுகின்றன. வைஜயந்திமாலாதான் திலீப்பின் மகிழ்ச்சிக்கோ அளவில்லை கூடையைத் தூக்கி அவளின் தலையில் வைக்கிறான். கொஞ்சம் கொஞ்சமாக ஊர் ஒன்று திரள்கிறது. ஜொனி வாக்கரும் சேர்ந்து கொள்கிறான். வீதி தயாராகிறது. வீதி தயாராகும் காட்சி அற்புதம். அதில் வரும் பாடல் ''வாழ்க வாழ்க பாட்டாளியே" என்ற பாடல் இன்னும் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கின்றது.

தவறுதலாக மரப்பாலத்தை வெட்டிவிடுகிறான் அஜீத். பாலம் உடைந்துவிடும் நிலை: அவனது தவறு அவனது முறைப் பெண்ணினால் உணர்த்தப்படுகிறது. பாலத்தை நோக்கிக் குதிரை வண்டி ஓடிவந்து கொண்டிருந்தது. பாலத்தை நெருங்கிவிட்டது. பாலத்தின் மீது வண்டியின் சக்கரம் பதிந்தால் பாலம் நொறுங்கி திலீப் சாக வேண்டியதுதான். ஆஜானுபாகுவான கம்பீரத் தோற்றமுடைய அஜீத் மலை போல் பாலத்தைத் தாங்குகிறான். தனது தோளினால் நமது உணர்ச்சிகள் பெருக்கெடுக்கின்றன. பாலத்தின் மீது வண்டி ஓடுகின்றது. பாரம் அஜீத்தின் தோளை அழுத்துகின்றது. பாலத்தை வண்டி தாண்டியதுதான் தாமதம். பாலம் அப்படியே நொறுங்கி விழுகிறது. அடியில் அஜீத். இந்தக் காட்சி என்னை மிகவும் கவர்ந்த காட்சியாகும்.

இத்தகைய ஹிந்திப் படங்கள் இப்போது வருவதில்லை. ஏன் ஹிந்திப் படங்களே வருவதில்லையே. ஹிந்திப்படத்தின் நேரடித் தமிழ் வடிவங்களான அவன், ஆன், வானரதம், ஹாதிம்தாய், அல்லது மாயமோகினி, நல்ல பிள்ளை, அக்பர் ஆகிய படங்கள் மறக்கக் கூடிய படங்களா என்ன?

—●—

---

பாட்டி: மூன்டாம் பிறை பார்த்தேன் மனதில் ஒரு சந்தோஷம்


கமலா: மாரியில் மூண்டாம் பிறை தெரியாதே

பாட்டி: போடி பேச்சி வீடியோவில் பார்த்தேன்.

---

## நாடகமன்றே நடக்குது.

### நவீன கண்ணகி



கணவன்: கண்மணி... நான் அந்நிய நாடு போய் வர விடை தந்தருள்வாயாக...

மனைவி: பிராணநாதா என்னை... என்னை ஏதோ ஒரு இனம் புரியாத கவலை வாட்டுகிறதே... நீங்கள் அங்கு சென்று ஒரு மாதவியின் மடியில் என்னை மறந்தால்

கணவன்: ! ! !

---



பெண்: நீதிபதியவர்களே... அதோ நிற்கும் வாலிபன் என்னை வீதியில் மானபங்கப் படுத்தி விட்டான்.

நீதிபதி; எப்படி மானபங்கம் செய்தான்.

பெண்: நான் மழைக்குப் பிடித்துக் கொண்டுபோன ''லேடீஸ் அம்பறில்லா'' வைப் பார்த்து ''சீறும் புயலும் மழையும் சேர்ந்தால்சின்னக்குடைதான் தாங்காது என்று பாடினான்.

நீதிபதி: ! ! !

# பதிவு இசைக்கு றேடியோஸ்பதி

- பரவச மூட்டும் பக்திப் பாடல்கள்
- தித்திப்பான திரைஇசைப் பாடல்கள்
- கர்நாடக மேதைகளின் கர்ஞமிர்த கீதங்கள்
- தனித்தேன் பாடல்கள்

அத்தனை அமுத வெள்ளத்தையும் அள்ளிப் பருக

## வருக வருக றேடியோஸ்பதி பதிவு நிலையத்திற்கு

அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவு செய்து தருவதிலும் றேடியோ ரேப் றெக்கோடர்கள் — தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தையும் திருத்தம் செய்வதிலும் விற்பனை செய்வதிலும் முன்னிலையில் திகழ்பவர்கள்.

# றேடியோஸ் பதி

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

புடவைப் பூங்கா

வனிதையர் வண்ண ஓவியமாகத்திகழ
வானவில்லின் வர்ணங்களில்
வகைவகையான தினிசுகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

## கணேசன் ஸ்ரோர்ஸ்

# Kanesan Stores

63, 68, கே. கே. எஸ். றேட்,
யாழ்ப்பாணம்.

T'Phone: 7169, 8025.

## யாழ் பஸ் நிலையத்தில்

இப்போது மதுரகான இசையோடு
மக்களை கவர்ந்திழுக்கும்
மணிக்குரல் விளம்பர சேவையின்
விளம்பர அறிவிப்புகள் தினமும்
காலை முதல் இரவு வரை நடைபெறுகிறது.
உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களின்

விளம்பரங்களை சிறந்த முறையில்
ஒலிபரப்ப நாடுங்கள்

## மணிக்குரல் விளம்பர சேவை

யாழ் பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்

அறிவிப்பு: மணிக்குரல் மேஜர் ஷண்

# அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ்

நவம்பர் மாதம் இருபத்திநான்காம் நாள் மர்ஹூம் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்களின் பத்தாவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. சிறந்த கல்விமான், அறிஞர், சிந்தனையாளர் என்ற வகையில் தமிழ் பேசும் மக்கள் மட்டுமன்றி இலங்கையில் வாழும் எல்லாச் சமூகத்தவரும் அவரை நன்கு அறிவர்.

அறிஞர் அஸீஸ் அவர்கள் புகழ் பெற்ற வழக்கறிஞர் மர்ஹூம் காதி எஸ் எம் அபூபக்கர் அவர்களுக்கு புதல்வராக யாழ்ப்பாணத்தில் 11-10-1911ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும், இடை நிலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் பெற்று இலங்கை பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றார். பின்னர் 1933ம் ஆண்டில் இலங்கை அரசின் புலமைப் பரிசில் பெற்று இங்கிலாந்து கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பெறச் சென்ற சமயம் இந்நாட்டின் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியெய்திய காரணத்தினால் அதில் பதவியேற்பதற்கு நாடு திரும்பினார். இப்பரீட்சையில் தேறிய முதல் முஸ்லிம் இவரேயாவர். 1937ல் கொழும்பு மாநகரில் பிரபல குடும்பம் ஒன்றில் இவர் திருமணம் செய்ததன் காரணமாக அங்கேயே வாழ் நாளில் அதிக காலத்தைக் கழித்தார்.

1948ம் ஆண்டு வரை அரசாங்கத்தில் பல முக்கிய உயர் பதவிகளை வகித்து வந்தார். கல்முனையில் இவர் உதவி அரசாங்க உத்தியோகத்தரராகக் கடமையாற்றிய போது மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் வாழ்ந்து வந்த சுவாமி விபுலாநந்தரோடு மிகவும் தொடர்பு கொண்டிருந்தார். 1945ம் ஆண்டு இலங்கையில் வாழும் வறிய முஸ்லிம் மாணவர்களின் நலன் கருதி 'முஸ்லிம் கல்விச் சகாய நிதி'யை அங்குரார்ப்பணம் செய்தார். இந் நிதியினால் உதவி பெற்ற பலர் இன்று பல துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். 1948ம் ஆண்டு ரி. பி. ஜாயா அவர்களின் வேண்டுகோளின் பேரில் சிவில் சேவையில் மிகப் பெரிய எதிர்காலத்தைக் கொண்டிருந்த அறிஞர் அஸீஸ் அவர்கள் இந்நாட்டு முஸ்லிம்களின் கல்விப் பீடமான கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்பதற்காக அரச பதவியிலிருந்து இளைப்பாறினார்.

அன்றிலிருந்து அவரது கல்விச் சிந்தனை செயல் உருவம் பெற, ஆரம்பித்து புதிய சிந்தனைகள் வளரவும் தொடங்கின. கல்விச் சகாய நிதியை நடாத்திச் செல்வதற்கும், ஸாஹிறாக் கல்லூரி அதிபர் பதவியை ஏற்று நடாத்துவதற்கும் தாம் சுவாமி விபுலாநந்த அடிகளாரோடு கொண்டுள்ள உரையாடலின்போது உருவாக்கிய கருத்துக்கள் துணையாக இருந்தன என அறிஞர் அஸீஸ் கூறினார். 1950ம் ஆண்டில் அகில இலங்கை வாலிப முஸ்லிம் பேரவை (வை. எம். எம். ஏ.) அறிஞர் அஸீஸ் அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இன்று இப்பேரவை நாட்டின் பல பாகங்களில் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட கிளைகளுடன் சிறந்து இயங்குகின்றது.

அவர்கள் காலத்தில் ஸாஹிறா கல்லூரியில் ஏற்பட்ட தமிழ் இலக்கிய ஆர்வர் ஈடுபாடு ஆகியன அஸீஸையே சாகித்திய மண்டலப் பரிசு பெறத்தக்க சிறந்த தமிழ் எழுத்தாளன் ஆக்கிவிட்டது. அவரின் ஆரம்பகாலப் பேச்சுக்கள் கட்டுரைகள் ஆகியன ஆங்கிலத்திலேயே இடம் பெற்றன. எனினும் பிற்காலத்தில் அவர்கள் தமிழிலேயே அதிக நூல்களை எழுதினர். அவற்றில் பெரும்பாலும் பிரயாண அனுபவ நூல்களாகும். மகாத்மாகாந்தி, ஆறுமுக நாவலர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர் பற்றியதும், மேலும் சில சிங்கள, முஸ்லிம் மகான்கள் பற்றிய கட்டுரைத் தொகுப்புகள் அடங்கிய நூல் ஒன்றை "The West Reappraised" என்ற பெயரில் ஆங்கிலத்தில் 1964ம் ஆண்டில் வெளியிட்டார்.

பதின்மூன்று வருடங்கள் அரச சேவையிலும் அடுத்த பதின்மூன்று வருடங்கள் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரி அதிபராகவும், அதை அடுத்த பதின்மூன்று வருடங்கள் பொதுச் சேவை ஆணைக் குழுவிலும் பரந்துபட்ட கல்விச் சேவைகளிலும் அன்னாரது வாழ்வு கழிந்தது. பேருவளையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முஸ்லிம் கல்வி கலாச்சார நிலையமான "ஜாமியா நளீமிய்யா" ஆரம்பிக்கப்பட்டபோது அதன் பிரதம ஆலோசகராக அறிஞர் அஸீஸ் அவர்கள் இருந்தார்கள். கட்டிட அமைப்புக்களிலும் பாடத்திட்டங்கள் தயாரிப்பதிலும் அவர்களின் ஆலோசனைகள் பெரிதும் உதவியிருக்கின்றன. எழுபத்தி மூன்றாம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பத்தொன்பதாம் நாள் இந் நிறுவனம் திறந்து வைக்கப்பட்ட பின் மூன்று மாத காலத்தில் அறிஞரை இறைவன் தன்பால் அழைத்துக் கொண்டார்.

—எம். ஏ. எம்

—●—

# 'அகதி'

## (ஒரு ஜேர்மனிய நாவல்)

—சசி. கிருஷ்ணமூர்த்தி

முதலாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்பும் ஐரோப்பா எங்கும் அரசியல் கொந்தளிப்பு தணியவில்லை. அதிகாரப் போட்டிகளில் தொடர்ந்தும் நாடுகள் சிக்கிச் சீரழிகின்றன. ஜேர்மனியும் நாஜி ஆட்சியில் அல்லோல கல்லோலப்படுகிறது. பேரினவாதப் பெரு நெருப்புக்கு முகம் கொடுக்க முடியாத யூத இனம் நாலாதிசையும் சிதறி ஓடுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்களின் தலைவிதியே மாற்றப்படுகின்றது.

யூத இனம் மட்டுமல்ல ஜேர்மனிய நாஜிக்களின் அதிகார வெறிக்கு ஈடுகொடுக்க முடியாதவர்களும், அதை எதிர்க்கத் தலைப்பட்டோர்களும் அகதிகளாக்கப்படுகின்றனர். அகதிகள் ஆஸ்திரியா, செக்கோஸ்லவாக்கியா, சுவிற்சலாந்து, பிரான்ஸ் இவ்வாறு எங்கெங்கெல்லாமோ வாழ்க்கையைத் தேடி ஓடுகின்றார்கள். அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு எங்குமே ஆறுதல் கிட்டவில்லை. மனிதர் வாழும் நாட்டில் மனிதர் விரட்டப்படுகின்றனர். சட்டங்களுக்கும் அதிகார வெறிக்கும் முன்னால் மனிதாபிமானம் தோற்றுப் போகின்றது. அதிகாரிகளின் மிரட்டலும் சிறைவாசமும் பழகிப் போகின்றன ஏமாற்றும், ஏமாற்றமும் வாழ்க்கையின் அம்சங்களாகிவிடுகின்றன. இவற்றுக்கிடையேயும் இவர்களிடம் மனிதப் பண்புகளும், தோளாமையுணர்வும் எஞ்சிக்கிடக்கின்றன.

இந்தப் பகைப் புலத்தைக் காட்டும் 'அகதிகள்' என்ற ஜேர்மனிய நாவல் பொதுவாக 1933க்குப் பின் ஐரோப்பா எவ்வாறு இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

தந்தை யூதனென்ற காரணத்திற்காக நாட்டை விட்டு ஓடிவந்து, தந்தையைத் தேடித் திரியும் கெர்ன், ஜேர்மனியனாக இருந்தும் நாஜி ஆட்சியை எதிர்த்து சிறை சென்று பின் சிறையில் இருந்து தப்பி மனைவியையும் பிரிந்து வரும் ஸ்டீனர், சிறையில் துணி தைக்கும் முன்னாள் பேராசிரியர், சிறை, தலைமறைவு வாழ்க்கை இவற்றில் சலிப்புற்று தானாக சிறைப்பட்டுக்கொள்ளும் பல்கலைக்கழக ஆசிரியர், கண்காட்சியில் எடுபிடி வேலை செய்யும் சட்ட மேதை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாரில், இவர்கள் எல்லோருமே தனிப்பட்டவர்களல்ல. ஒரு கால கட்ட அரசியலில் பகடைக்காய்களாகிப் போனவர்களின் பிரதிநிதிகளே.

'அகதிகள்' என்ற இந்த நாவலை எழுதிய எரிக் மரியா ரிமார்க், ஒரு ஜேர்மனியர். எனினும், யூதர்களின் நண்பர். யூதர் நாஜி ஆட்சியில் பட்ட துன்பங்களையும், யுத்தத்தின் கோர விளைவுகளையும் நாவலாக்கியவர்.

பதின்மூன்று வயதான போதே இவரை யுத்தமுனை அழைத்தது. யுத்தத்திற்குப் பின் ஆசிரியத் தொழில். அதன் பின் வெவ்வேறு தொழில்களைச் செய்தார். கல்லுடைக்கும் வேலை, மோட்டார் டயர் திருத்தும்வேலை இப்படிப் பல. வாழ்க்கையின் நுணுக்கங்களை துருவிப் பார்க்கும் இயல்பும், யுத்த அனுபவமும் இவரது இலக்கியத்திற்கு வளமூட்டின இவரது நாவல்கள் சில திரைப் படமாகவும் வெளிவந்தன.

ஏகாதிபத்தியங்களின் ஆயுதப் போட்டியினால் யுத்தம் தவிர்க்க முடியாததாகிவிட்ட சர்வதேச போக்கு, சிறுபான்மையினங்கள் அச்சுறுத்தப்படுகின்ற தேசிய நிலைமைகள் — இந்த சூழலில் எரிக் மரியா ரிமார்க்கின் நூல்கள் நமக்கு அறிமுகமாவது மிகவும் அர்த்தமுள்ளதாகவிருக்கும்.

---

## அடை(வு) மழை



- இது அடை மழையல்ல அடைவு மழை
- ஏன்?
- அடை மழைக்கு நகையெல்லாம் அடைவுவைத்துக் குடிக்கிறார்.

— அதிமதுரம்

---

கணவன்: எனக்கு உத்தியோக உயர்வுடன் இடமாற்றமும் கிடைத்திருக்கு!

மனைவி: உத்தியோகத்தை ராஜினாமாச் செய்திட்டு ஊரோடு இருங்க.

# வரலாற்று வெல்லம்

## • இரண்டு காணிக்கைகள்

முஸ்ஸா ஜலீல் என்பவர் ஒரு சோவியத் கவிஞன். விடுதலைக்காகப் போராடிய அக் கவிஞன், நாஜிகளால் மரணதண்டனை பெற்றான். மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்குச் சில நிமிடங்கட்கு முன்பு அவரது கடைசி ஆசை நிறைவேறியது. சில கவிதை வரிகளைப் பாட வேண்டும் என்பதே அவரின் அவா. இதோ அவரின் வீரக் கவிதை: —

''வசந்தத்தின் வனப்பை உணர்ந்து நான் பாடினேன்
தேசத்துக்காகப் போராடப் போகும்போது பாடினேன்
இப்போது.........
தூக்கிய கொடுவாள் கையில் இருக்க இறுதிப் பாட்டு
நான் பாடுகிறேன்
சுதந்திரத்தை அனுபவிக்கக் கவிதை எனக்குப்புகட்டியது
சர்குப்போது போராடக் கவிதை கட்டளை இடுகின்றது
என் வாழ்க்கை என் மக்களுக்குக் கவிதையாகட்டும்
என் மரணம் ஒரு போராட்டத்தின் கவிதையாகட்டும்''

□ □

அகமது ஷா என்பவர் வட இந்தியாவின் ஒரு பகுதியை ஆண்டவர். பிரிட்டிஷாரிடம் தமது அரசை இழந்த அவர் கொரில்லாப் போராட்டம் நடாத்தினார். அவர் கங்கைக் கரையைக் கடந்து செல்லும் போது பிரிட்டிஸ் படைவீரர் ஒருவரின் தோட்டா அவரின் இடது கையைப் பதம் பார்த்தது. அந்தக் கை இனி எதற்கும் பயன்படாது என அறிந்த அகமது ஷா தனது இடக் கையை வாளினால் வெட்டி 'பாரதத் தாயே இது உனது மகனின் சுதந்திரக் காணிக்கை' என கங்கையில் இட்டுச் சென்றார். வரலாற்றில் இடம் பெற்ற இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் மனதை உலுக்குவன.

## • சர்வசன வாக்கெடுப்பு

டச்சுக்காரர் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பவர்கள். வீர வரலாற்றில் தனியிடம் பெற்ற லெய்டன் நகர மக்களுக்குப் பரிசு அளிக்க விரும்பிய மௌனி வில்லியம், வரி விலக்கா? பல்கலைக்கழகமா? வேண்டுமென ஒரு வாக்கெடுப்பு நடாத்தினார் பல்கலைக் கழகமே வேண்டுமென மக்கள் வாக்களித்தனர். அன்று ஆரம்பிக்கப்பட்ட லெய்டன் பல்கலைக்கழகம் இன்றும் இயங்குகின்றது.

## • வீர சுதந்திரம்?

இந்தியா சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. அதன் பின்பும் பல யுத்தங்களை அது கண்டிருக்கிறது. பாகிஸ்தான் – இந்தியா யுத்தம், சீன — இந்தியா யுத்தம், பங்களாதேஷ் விடுதலைப் போர் என்பன மறக்க முடியாதவை. இந்த யுத்தங்களால் இறந்து போன அயல் நாட்டு யுத்த வீரர்களிலும் பார்க்க, இந்திய மாநிலப் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாது இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இந்திய மக்களே அநேகம்.

ஹிந்தி எதிர்ப்புப் போரில் தமிழ் நாட்டில் பொள்ளாச்சிச் சந்தையில் படுகொலை செய்யப்பட்டவர்களும் இதில் அடங்கும்.

## • ரசமட்டமும், மட்டரசமும்

கல்கி அவர்கள் ஒரு காலத்தில் பிரபல்யமான விமர்சனங்களை அள்ளி வீசியவர். அவர் ரசமட்டம் என்ற பெயரில் பல விமர்சனங்கள் எழுதினார்.

கல்கியின் விமர்சனங்கள் புதுமைப்பித்தனுக்குப் பிடிக்கவில்லை. கல்கியின் விமர்சனங்களைக் கண்டிக்க அவர் கொடுத்த தலையங்கம் மட்டரசம். மட்டரசம் பகுதியை வாசிக்க அக்காலத்தில் வாசகர்கள் போட்டி போடுவர்.

## • சக்கரவர்த்தியும், பெண் உலகமும்

பெண்களை அடக்கி வாழ எண்ணுவோர் சக்கரவர்த்திகளாயினும் வெற்றியடைய முடியாது. நெப்போலியன் போர் வீரன் மட்டுமல்ல, அவன் ஒரு சட்ட நிபுணனும் ஆகும். அவன் இயற்றிய சட்டக் கோவை பிரபல்யமானது. (Code of Napoleon) அதிலே பெண்களை அடக்கி ஒடுக்க ஆண்களுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

நெப்போலியனின் இவ்வித பேர்க்குணம் பெண்களுக்குப் பிடிக்கவில்லை. இதன் விளைவு — அவனால் குடும்ப வாழ்விலும் சரி, காதல் வாழ்விலும் சரி வெற்றியடைய முடியவில்லை.


## • குடத்துள் ஒரு விளக்கு

ஈழத்து எழுத்தாளர்கட்குள் தத்துவப்படைப்புக்களை அள்ளி எழுதியவர்களில் 'தீபஞானம்' என்றவரும் ஒருவர். மனிதனைப் பற்றி அவர் எழுதிய நூல் என்னைக் கவர்ந்தது. துன்புற்ற மனிதர்கட்காக அவர் கவிதை ஒன்றை மேற்கோள் காட்டி எழுதியுள்ளார். அக்கவிதை இதோ; —

''வாழ்க்கை ஒரு கணக்கு நண்பா!
இறைவன் அதைச் செய்யச் சொன்னான்.
வழியை அவன் சொல்லித் தந்தான்
விழியை அதில் வைத்துச் செய்வாய்
பெருக்கல் வரும், பின்னம் வரும்
பெரிய எண்கள் பின்னால் வரும்
குறுக்கல் வரும், கூட்டல் வரும்
குத்தல் புள்ளி இடையில் வரும்,
வகுத்தல் வரும், வாங்கல் வரும்
வாய்ப்பாடுகள் சேர்ந்து வரும்
வழியை விட்டு விலகா விடில்
விரும்பும் விடை விரைவில் வரும்.''

— திக்கவயல்

எமது சுவைஞர்களுக்கு
இதயம் கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்.



**அண்ணைக் கோப்பிக்கு
நிகர்
அண்ணைக்கோப்பியே**

●

# அண்ணைக் கோப்பி

**இணுவில்**

தொலைபேசி: 23412

புது வருடம் நகை பூத்துக் குலுங்க
பொங்கலோ பொங்கலென்று
எமது வாடிக்கையாளரை
வாழ்த்துகின்றோம்.

- தரமான தங்கம்
- நவீன டிசைன்கள்
- குறித்த தவணை

மங்கள நாட்களில்
மனங் கவரும் நகைத் தெரிவுக்கு
மறக்காமல் விஜயம் செய்யுங்கள்

# நியூ லலிதா ஜுவெல்லர்ஸ்

*உரிமையாளர்:*
ஆ. ந. ஆனந்தராசா

**74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**

# அன்னை தெரேசா அம்மையார்

''உலகை இன்று பீடித்துள்ள மாபெரும் வியாதி தொழு நோயுமல்ல; காச நோயுமல்ல; யாருமற்ற அநாதைகளாக, சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு, தயவு, தாட்சண்யம், ஈவிரக்கமில்லாமல் அன்பையே அநுபவிக்காமல் வாழும் நிலையே கொடிய நோயாகும். தீராத நோய்களையெல்லாம் தீர்க்கவல்ல மருத்துவம் இன்று உண்டு. ஆனால் உள்ளத்தை நெகிழவைக்கும் தூய அன்பில்லாமைக்கு இப்பாரினிலே பரிகாரமேயில்லை'' என்கிறார் பாரதப் பிரஜையான கல்கத்தாவின் ''கண் கண்ட தெய்வம்'' தெரேசா அம்மையார்.

1979ம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற ''நோபல்'' பரிசு பெற்ற தெரேசா அம்மையார் அன்பிலா வியாதிக்கு மருந்தொன்று இருக்கு என்கிறார். அந்த அருமருந்து ஆண்டவன் கிருபாகடாட்சத்தினால் விளைவது; அன்புத் துடிப்புள்ள இதயத்தின் ஊற்றை சேவை என்னும் பணியில் அர்ப்பணிக்கத் துடிதுடிக்கும் கரங்களே அம்மருந்தாகும் என்கிறார் இலங்கை வாழ் விருக்கும் ''சாக்கடை ஞானி''

'நோபல்' கமிட்டியின் தலைவர் ஜான்சன்ஸ் அன்னை தெராசாவிற்கு விருதுவழங்குகையில், 'தனி ஒருவனின் உயர்வு, கௌரவம், முக்கியத்துவம் ஆகியவற்றை நிலை நாட்ட அம்மையார் ஆற்றிய அரும்பெரும் சேவைக்காகவே இவ் விருது வழங்கப்படுகிறது'' என்றார். மேலும் அவர் சொன்னார்; ''தனிமையில் ஏங்கித் தவிச்சவன், கண்ணெடுத்தும் பார்க்கத் தகுதியற்ற கண்ணறுவி, உயிர் போகும் தறுவாயில் உள்ளவன், தொழு நோய் பீடித்தவன், குப்பை கூளத்தில் வீசியெறியப்பட்ட சிசு ஆகியோருக்கு அன்னை தெரேசாவும் அவரின் 'கருணைத் திருத் தூதர்கள்' சங்கமும் ஏற்றத் தாழ்வு காட்டாமல் பாரபட்சமின்றி பணியாற்றியுள்ளனர்''

1946-ம் ஆண்டு வட கிழக்கு இந்தியாவில் உள்ள டார்ஜீலிங் மலைப் பிரதேசத்திற்கு புகையிரதத்தில் செல்லுகையில், ''வறியோர்க்கும் வறியோரிடத்தில் வதியும் ஆண்டவன் சேவையில் ஈடுபடு'' என்று அந்தராத்மா ஒலித்தது.

ஒல்லியான, குள்ளமான 42 வயது அன்னை தனது முதலாவது அநாதைகள் அந்தியகால ஆசிரமத்தை கல்கத்தாவில் உள்ள இந்துக் கோயில் ஒன்றுக்கு அருகாமையில் ஆரம்பித்த பொழுது 400 பார்ப்பனர்கள் படையெடுத்து வந்து ஆர்ப்பாட்டம் செய்து தடுக்க முயன்றனர். ''என்னை வேண்டுமானால் கொல்லுங்கள்! ஆனால் உள்ளே இருப்பவர்களை நிம்மதியாக சாக விடுங்கள்!'' என்று கல்லுங்கரையும் வண்ணம் அம்மையார் கூறியதும் பார்ப்பனர்கள் வெட்கித் தலை குனிந்து வீடு திரும்பினர்.

சுமார் 35 வருடங்களாக கல்கத்தாவின் சேரிப்புறங்களிலே பணியாற்றிவரும் அன்னை தெரேசா 'கருணைத் திருத்தூதர்கள்'' என்னும் சங்கத்தை 1948ல் ஆரம்பித்தார். இன்று அதன் 20 கிளைகள் பாரெங்கும் பரந்து பணிபுரிகின்றன.

பாரத கண்டத்தில் 81 பள்ளிக்கூடங்கள், 300 ஆஸ்பத்திரிகள் 60 இரட்சண்ய விடுதிகள் இயங்கி வருகின்றன. மேற்கத்திய பொருளாதார நிபுணர்களுக்கும், திட்டங்கள் தீட்டுபவர்களுக்கும் அன்னை தெரேசாவிற்கு கிடைக்கும் புகழும், பட்டங்களும், பெருநிதியமும் பெரும் புதிராகவேயிருக்கும். சர்வதேச ஸ்தாபனங்கள் வழங்கும் உதவிகளுக்கு வரவு செலவுத்திட்டங்கள் சமர்ப்பிக்க வேண்டும். பலன் அளிக்காவிட்டால் நிதியுதவி நிறுத்தப்படும். ஆனால் அன்னையார் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிப்பதில்லை. வருடா வருடம் எத்தனைப் பேர் 'தாங்யூ!' கடிதங்கள் எழுதினார்கள்! அருகி வருகிறதா? அல்லது பெருகி வருகிறதா? இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. அன்னையின் பணி அபயம் அளிக்கப்பட்டோரின் அகத்திலே. அமைதியும் முகத்திலே முகிழ் நகையும் தென்பட்டால் அதுவே போதுமானது,

''பணி செய்யும் போது பெருமைப் படாதே! கர்வம் கொள்ளாதே! அகங்கார மமகாரங்களுக்கு இடங் கொடாதே! இறை பணியென்று செய்'' என்கிறார் கருணாதேவி.

ஔவை சொன்னாள்; ''இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம் தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

---

ஒருவர்: என்ன கட்சி மாறி விட்டீங்களா?

அரசியல்வாதி: அது குருமாற்றம்செய்தவேலை

---

## புது வருடம் பொலிவு பெற

## எமது பொன்னான வாழ்த்துக்கள்.

★

- கைதேர்ந்த கலைஞர்களின் கைவண்ணமே எமது ஆபரணங்கள்.
- அழகுக்கு இலக்கணம் கூறும் ஆயிரம் ஆயிரம் டிசைன்கள்.
- இன்றே விஜயம் செய்து உங்கள் ஆடர்களை குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளுங்கள்.



★

# ● ராணி ஆபரண மாளிகை ●

ராணி ஆபரண மாளிகை
63, கன்னாதிட்டி, (R.G. பில்டிங்)
யாழ்ப்பாணம்.

**Ranee Jewellers**
63, KANNATHIDDY, (R.G. BUILDING)
JAFFNA.

☎ 23544

## காந்தியடிகளின் (நகைச்) சுவை

மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் பல வித தானங்கள் வழங்குவதில் சிறந்து விளங்கியவர். இதோ அவர் நகைகளேயும் சுவையாக வழங்கும் தன்மையைப் பாருங்கள். அன்றைய நாள் நாம் குயின்ஸ் மேரி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தோம். அன்ருெரு தினம் சுதந்திரத் தந்தை காந்தியடிகளாரின் வருகை அக் கல்லூரிக்குக் கிடைத்தது. அவர் வருகைக்கு அக் கல்லூரி நிருவாகம் பெரு வரவேற்பு அளித்தது. மாலேகள் சூட்டினர்கள். அவ்வேளேயில் அன்றைய மாணவர்களாகிய நாமும் அப்பெருமகனுர்க்கு என்ன பங்களிப்பைச் செய்யப் போகின்ருேமோ என எண்ணி ஈற்றில் எல்லா மாணவர்களும் சேர்ந்து ஒரு முடிவுடன் நாம் அணிந்த தங்க வளேயல்களேயெல்லாம் களேந்து அவருக்கு முன்னுல் ஒப்படைத்தோம்.

உடனே காந்தி அடிகள் ஆகா மிகவும் விலே கூடிய தங்க நகைகள் கிடைத்துவிட்டனவே என்று மாணவர்களே விளித்து, உங்களுக்காகவே இந்த வளேயல்கள் பெற்ருேரால் வருந்தி உழைத்து அணிவிக்கப்பட்டன அதனே நீங்களே அணிவதுதான் சிறப்புத் தரும். தயவு செய்து எந்த மாணவிகள் தமது வளேயல்களேப் போட்டாரோ தவருது அவர் அவரே எடுத்துச் செல்லக் கடவர் என்ருர்.

முதலில் மாணவர் கூட்டம் தயங்கியது என்ருலும் பின்னர் ஒருவாறு தத்தம் நகைகளேப் பெற்றனர். பின்னர் காந்தியடிகளார் மாணவிகளே நோக்கி, இப்போது தங்க வளேயல்களே பெற்ற நீங்கள் எனக்கு உங்கள் அன்பு வளேயல்களே மட்டும் அர்ப்பணியுங்கள் அதுவே போதும் என்ருர். மாணவர் யாவரினது முகமும் மலர்ந்த நிறைவுக்கு மலர்தான் ஈடாகுமா? அப்பொழுது மகாத்மா காந்தி அடிகளாரும் தனது பொக்கை வாயினுல் மலர்ந்த மகிழ்ச்சியைப் பார்க்க வேண்டுமோ?

இரத்தினுமா நவரத்தினம் அவர்கள் உரையிலிருந்து

— இ. நந்தகோபால்

### சிந்திக்க வேண்டுகின்றேன்........

நம்மைப் பற்றி நாம் எப்பேரதும் பிரமாதமாக நினேத்துக் கொண்டிருக்கிருேம். ஆகவே நம் உண்மையான சுய உருவத்தை யாராவது எடுத்துச் சொன்னுல், அவர்கள் நம்மை அவமானம் படுத்தி விட்டார்கள் என்று கூறுகிருேம்.

— ஓர் அறிஞர்



- அவள் மங்கா என்னேக் கண்டால் மூக்குச் சிமிட்டிருளே! என் மேல் என்ன கோவம் அவளுக்கு?
- போடி மண்டு .. அவள் எல்லாரையும் கண்டுதான் மூக்குச் சிமிட்டிருள்... வைர மூக்குத்தி போட்டிருக்கிருளென்று காட்டுவதற்காக.

— அதிமதுரம்

ஆண் நுளம்பு: வாழ்க்கை சுவைக்கவில்லே... நான் தற்கொலே செய்யலாமெனப் பார்க்கிறேன்.

பெண் நுளம்பு: ஏன்?

ஆண் நுளம்பு: தேங்காய்த் தட்டுப்பாட்டால் ஒருதனுடைய இரத்தமும் சுவைக்குது இல்லேயே!

— நந்து

எழுத்தாளன்: ஒரு தாலாட்டுச் சொல்லுங்க!

பாட்டி: ஐயோ தம்பி... நிறையத் தெரிந்த நான், தொலேக்காட்சி வந்த பின்பு மறந்து போனேன்...

— அதிமதுரம்

டாக்டர்: உள்ளதைச் சொல்... இந்தக்காயம் எப்படி ஏற்பட்டது?

ஒருவர்: மனேவியில் நான் குற்றம் சுமத்தவில்லே... குருமாற்றம் எனக்குக் கூடாது.

என்ன சோதிடரே குருமாற்றம் எனக்கு நல்லதென் றீங்க... சுரண்டல் சுவீப் என்னேச் சுரண்டிப் போட்டுதே!

— அதிமதுரம்

பொதுமக்களுக்கும், வர்த்தகப்பெருமக்களுக்கும் பயன்தரக்கூடிய நல்ல பல சேவைகளை நாணயத்துடன் அளித்துவரும்—

# மல்ரி சேவிசஸ்

தாபனத்தார்,

மாணவ மாணவியர்களும்,
அலுவலகங்களில் பணிபுரிபவர்களும்,
அயல்நாடு செல்லவிருப்பவர்களும்,
அறிவை விருத்திசெய்ய ஆசைப்படுபவர்களும்,
பிரயாணச் செலவையும்,
போக்குவரத்து நெரிசலையும்,
போதிய நேரமின்மையையும்,
தவிர்த்து—
வீட்டில் இருந்தபடியே,
வேண்டிய நேரத்தில்,
மிக இலகுவான முறையில்,
குறுகிய காலத்திற்குள்,
ஆங்கிலம் படித்துப் பயனடையக் கூடிய வகையில்,
விரைவில் ஆரம்பிக்கவிருக்கும்,

## அஞ்சல் வழி ஆங்கிலம்

விபரங்களுக்கும்: விண்ணப்பப்படிவத்திற்கும், எழுத வேண்டிய முகவரி:

**மல்ரி சேவிசஸ்**
**37(351) மணிக்கூட்டு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# பலரசக் கலசம்

## பாரதி தந்த பசுந்தமிழ்

தமிழ் மொழிக்குப் பலர் புத்தம் புதிய சொற்கள் பலவற்றை அறிமுகம் செய்திருக்கிறார்கள். இந்த வரிசையில் மகா கவி பாரதியார் அவர்கள் தமிழ் உலகிற்கு புரட்சி, விடுதலை, பொதுவுடமை முதலான சொற்களை தமது எழுச்சிக் கவிதைகள் மூலமும் சமுதாய சீர்திருத்தக் கவிதைகள் ஊடாகவும் அறிமுகம் செய்து வைத்தார். மேற்படி சொற்களை பாரதியாருக்கு முன் எந்தப் புலவனும் பயன்படுத்தவில்லை என்பது சிதம்பர ரகுநாதன் உட்பட பல அறிஞர்களது கருத்தாகவிருக்கின்றது.

## இரு கன்னத்திலும் மீசை

ஆண்கள் இப்போது தமது இரு கன்னங்களிலும் கிருதா வைத்துக் கொள்கிறார்கள். இதனை ஆங்கிலத்தில் (Side burns) என அழைப்பார்கள். இந்த கிருதா வைத்துக்கொள்ளும் முறையை முதன்முதலாக உலகிற்கு அமெரிக்க செனட்டராக இருந்த திரு. Burn side என்பவர்தான் அறிமுகம் செய்தார். அவரது திருப்பெயரில் சில மாற்றங்களைச் செய்து கொண்டு இன்று முழு உலகையுமே ஆட்டிப் படைக்கும் நாகரீகமாக இந்தக் கன்ன மீசை திகழ்கிறது.

## பேராசிரியர் கல்கியின் பத்திரிகைப் பணி

தன் நா அசைத்து நாடசைத்தவர் அறிஞர் அண்ணா என்றால் தன் பேனா அசைத்து பெரும் புகழ் கொண்டவர் கல்கி அவர்களேயாகும். தமிழ் நாட்டின் ''வால்டேர்ஸ்கொட்'' என வர்ணிக்கப்பட்ட கல்கியின் தமிழ்ப் பணி பரந்துபட்டது. அவரது பத்திரிகைப் பணியும் சிறப்புமிக்கது.

ஆங்கிலம் கற்ற பண்டிதர்களும் வழக்கறிஞர்களும் ஆசிரியர்களும் அரசாங்க அதிகாரிகளும் தமிழை மதிப்பதில்லை. தமிழைப் பேசுவதில்லை. தாங்கள் தமிழர் என்று உணர்ந்து நடப்பதில்லை எனக் கூறி பாரதியார் கண்ணீர் வடித்தார். அத்தோடு இவர்களெல்லாம் நல்ல தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்க வேண்டும் என அவர் ஆசைக்கனவு கண்டார். அவரின் ஆசைக்கனவையெல்லாம் நனவாக்கியவர் கல்கி அவர்களேயாகும். ஆங்கிலம் படித்த குடும்பங்களிலெல்லாம் தமிழ் பத்திரிகை படிக்கும் பழக்கம் கல்கியின் எழுத்தினாலேயே நிறைவேறியது.

கல்கி அவர்கள் காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு ராஜாஜியோடு திருச்செங்கோடு ஆச்சிரமத்தில் இருந்தார். அங்கிருந்தபோது திரு. வி. க. அவர்களின் நவசக்தியில் சேர்ந்தார். நவசக்தியில் பெரும்பாலும் அவருக்கு மொழிபெயர்பு வேலைகளே இருந்தன. இதனால் அவர் அங்கியிருந்து விலகி எஸ். எஸ். வாசன் நடத்திய ஆனந்த விகடனில் சேர்ந்து பணியாற்றினார். ஆனந்தவிகடனைத் தலைசிறந்த நகைச்சுவைப் பத்திரிகையாக்கியவர் கல்கியாகும். அதைத் தொடர்ந்து அவர் தமது சொந்தப் பெயரில் 'கல்கி'யை ஆரம்பித்து நடத்தலானார். அத்தோடு அவர் ராஜாஜி நடத்திய 'விமோசனம்' என்ற பத்திரிகையிலும் சில காலம் பணியாற்றியிருக்கிறார்.

## முடியரசனின் முத்தான கருத்து

படித்தவர்களதும் மாட மாளிகைகளிலும் பண்டிதர்களது கூட கோபுரங்களில் முடங்கிக்கிடந்த தமிழ் இலக்கியதைப் பாமர மக்களது வீட்டுத் திண்ணையிலும் உலாவவிட்டவர். பாரதி; பாரதியார் இப்பணியில் தனியொரு புலவனாகவன்றி தன் பின் ஒரு பரம்பரையே உருவாக்கிவிட்டவர். இவரது பணி பற்றி கவிஞர் முடியரசன் அவர்கள் ஒரு முறை எடுத்துரைத்த பாங்கு என்னைக் கவர்ந்தது. முடியரசன் இப்படிச் சொன்னார்

''பாரதி ஒரு பேரருவி; பாரதிதாசன் பேரருவியால் தோன்றிய உயிராறு; பரம்பரையினரோ அவ்வாற்றிலிருந்து பிரிந்து வளமூட்டும் கிளையாறு''

''பாரதி ஒரு வித்து; பாரதிதாசன் அவ்வித்திலிருந்து முளைத்த ஆலமரம்; பரம்பரையினர் அவ்வாலமரத்தின் விழுதுகள்''

அருமையான உவமான உவமேயங்களை எடுத்துரைத்துத் தற்காலக் கவிதையுலகை அழகாக முடியரசன் படம் பிடித்துக்காட்டியுள்ளார் அல்லவா!

## மூன்று மேதைகள்

இந்திய மக்களது கலை கலாசாரப் பாரம்பரிய சிறப்புகளையெல்லாம் மேலைத்தேயத்தவர்கள் அறிந்துகொள்ளும் வண்ணம் முதன் முதலில் தொண்டாற்றியவர் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களாகும்.

□ □

தமிழ் அறிஞரும் பல தமிழ் நூல்களை அச்சு வாகனம் ஏற்றிப் பதிப்பித்தவருமான திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள்தான் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது பட்டதாரி என்ற பெருமைக்குரியவராகும்.

□ □

சிவில் சேவைப் பரீட்சையில் முழு ஆசியாவிலுமே மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக நியமனம் பெற்ற முதல் இலங்கையர் சேர். பொன். அருணாசலம் அவர்களேயாகும்.

—கலாபரணி

உழவனின் திருநாளில்
எமது வாடிக்கையாளர்
உளமெலாம் மகிழ்வு பொங்க
எமது இதயம் கனிந்த
வாழ்த்துக்கள்

- தரத்துக்கு அர்த்தம் சொல்லும் அசல் 22 காரட் தங்கம்
- அழகுக்கு இலக்கணம் கூறும் ஆயிரம் ஆயிரம் டிசைன்கள்!

தங்க நகைத் தெரிவுக்கு
தவறுது நாடுங்கள்

மகாலக்ஷ்மி
ஜுவெல்லரி மார்ட்
213,A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஒரு முறை விஜயம் செய்தால்
ஒவ்வொரு முறையும்
விஜயம் செய்வீர்கள்

# ★ சிறையில் பூத்த இலக்கிய மலர்கள் ★

க. நவசோதி எம். ஏ.

சிறைச்சாலை என்பது மக்களின் உடல்களின் நடமாட்டத்திற்கும் அசைவிற்கும் விதிக்கப்படும் தடையை நடைமுறைப் படுத்தும் கூடமே யொழிய அங்கு உள்ளங்களின் சிந்தனைக்கு எவராலும் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்க முடியாது என்பதன் எடுத்துக்காட்டே ''சிறை தரும் தேன் கவிதை'', ''சிட்டிபாபுவின் சிறை டைரி'' எனும் இரு நூல்களாகும்.

## சிறை தரும் தேன் கவிதை

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை யொட்டி சென்னை மதுரை, திருச்சி, கோவை ஆகிய மத்திய சிறைக்கூடங்களில் கைதிகளாய் இருந்த இருபத்தைந்து கவிஞர்களின் அறுபத்து மூன்று கவிதைகளைக் கொண்டதே ''சிறை தரும் தேன் கவிதை'' என்ற தொகுதியாகும்.

பொய்யாமொழிப் புலவன், தமிழ் காக்கும் அரசு, மொழி வளம், நாட்டு வளம், சமுதாய சீர்திருத்தம் என்பன இவர்களின் பாடற் பொருள்களாகும். Long Live Tamil என்ற ஆங்கிலக் கவிதை யொன்றும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது.


## சிட்டிபாபுவின் சிறை டைரி

இந்தியாவிலே இந்திராவின் ''மிசா'' கைதிகளுள் சிறையிலே உயிர் துறந்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் நாட்டைச் சேர்ந்த சிட்டிபாபு அவர்களாவார்.

இந்திராவின் அதிகாரத்தில் ஆயுள் கைதியாகவே இருந்து மறைந்தவராகக் கருதப்பட்ட சிட்டிபாபு அவர்கள் தமது கொடுஞ்சிறை அனுபவங்களை ''ஆயுள் கைதியின் அனுபவங்கள்'' என்ற தலைப்பில் குறிப்புப் புத்தகமாய் எழுதினர்.

கடுமையான சிறைக்கட்டுப்பாடுகளுக்குத் தப்பிய இந்தக் குறிப்புப் புத்தகம் அவரின் துணைவியாரிடம் ஒப்படைக்கப்பட்டு ஜனதா ஆட்சி மலர்ந்த பின் முன்னைய அரசின் சிறைக் கொடுமைகள் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதி இஸ்மாயில் கமிஷனில் சமர்ப்பிக்கப்பட்டதாகும் இந்தக் குறிப்புப் புத்தகமே. ''சிட்டிபாபுவின் சிறை டைரி'' எனும் நூலாய் தமிழகப் பெருமக்களுக்குப் படைக்கப்பட்டது. சிறையில் மலர்ந்த இவ்விரு பூக்களும் தமிழக அரசியல் வரலாற்றுச் செல்வங்களாக மதிக்கப்படுகின்றன.

# நேயம் நயந்தவை



கேள்வி - பதில் என்ற பகுதி எந்தப் பத்திரிகையில் சுவாரசியமானதாக இருக்கும்? என்று யாரைக் கேட்டாலும், கேள்வி—பதிலா? 'சிரித்திரனி'ல் மகுடியிடம் கேளுங்கள் என்றுதான் பதில் வருகிறது...!

சிரித்திரன் என்ற நகைச்சுவைப் பத்திரிகை ஒரு தனி மனிதரின் அபூர்வ சாதனை என்றெல்லாம் 'இதயம் பேசுகிறது' மணியன் தன் இலங்கைப் பயணக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்ததை நேற்று மீண்டுமொரு முறை வாசித்துப் பரவசமடைந்தேன். தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற வாழ்த்துகிறேன்.

**எஸ். எச். நியமத்**
எருக்கலம்பிட்டி

தங்கள் வெளியீடான சிரித்திரன் நகைச்சுவையேடு படித்தேன். அது தற்போது சவூதியிலும் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது, எங்கள் பகுதியில் ஏராளமானவர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். அதில் பேனா நண்பர் பகுதி கண்டேன். அப்பகுதியில் நானும் இடம்பெற விரும்புகின்றேன். ஆகவே தயவுசெய்து என்னையும் சேர்த்துக்கொள்ளவும்.

**ஜோசப்**
டமாம், சவூதிஅரேபியா.

நவம்பர் மாத சிரித்திரன் படித்தேன் கொட்டப் பெட்டிக்குள் பெரும் பெட்டகத்தையே அடக்கி விட்டீர்கள் பலவருடமாக வெளிவந்த சிரித்திரனில் இம்மாத இதழ் மகுடம், நன்றாக சிந்தித்திருக்கின்றீர்கள். ஏதோ கவலையால் தாக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே தான் இப்படி எழுத முடிந்துள்ளது; நவம்பர் இதழ் உங்கள் தமிழில் சொன்னால் ''ரோஜா மலர் பிழியப்பட்டிருக்கிறது'' ஆரம்பத்திலிருந்து முடிவு வரை அறிவு முத்துக்களை சிதற விட்டிருக்கிறீர்கள். தற்போதுள்ள நிலையில் இதழின் முகப்பு மிகப் பொருத்தம். மகுடியின் கேள்வி—பதில் இம்மாதம் அபாரக் கருத்துக்களை அள்ளி வீசிவிட்டீர்கள்! சிறுகதையும் மகுடத்தில் மதிப்புள்ள வைரமாக ஜொலிக்கின்றது. சாதாரண கோழி மூலம் தாய்மையின் பெருமையை வெளிக்காட்டிய எங்கள் ஆறறிவுள்ள பெண்களுக்கு ஐந்தறிவுள்ள கோழிமூலம் (மா வெள்ளை மூலம்) வடகோவை சவுக்கடி கொடுத்து தமிழ்ச் சமுதாயத்தின் உன்னத பண்பாட்டை நாகரீகத்தின் சிதைவிலிருந்து காப்பாற்ற முனைந்திருப்பது, அல்லது தாய்மையின் பெருமையை வெளிப்படுத்த முயல்வதுச்சே! எவ்வளவு வெற்றி.

**எம். எஸ். பார்த்திபன்**
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

டிசம்பர் சிறுகதை பார்த்தேன். நடுத்தர குடும்பத்தில் மூத்தமகனை பிறந்த ஒருவன் ஒரு சைக்கிள் வாங்குவதற்கு படும் கஸ்டங்களை துல்லியமாக விளக்கியுள்ளார் எழுத்தாளர் சுதாராஜ் கந்தோரில் கடனாக பணம் பெற்றால்கரைந்துவிடுமே என்று பணம் பெறாமல் சைக்கிளாகவே பெற்றும் பாவம்! அது அவரின் தம்பிக்கே போய் சேருகிறது யாழ்ப்பாணத்து பிள்ளைகள் குடும்ப பொறுப்புள்ளவர்கள் என்பதையும் சூசகமாக தெரிவிக்கிறார். அவருக்கு எனது பாராட்டுகள்.

**சி. தவநேசன்**
மெயின் ஸ்றீற், கல்முனை.

சுதாராஜ் 'சைக்கிள்' சிறுகதையில் தனது முத்திரையைப் பதித்து விட்டார். ஒரு இலட்சிய எழுத்தாளன் சிறுகதை இலட்சணத்துடன் எழுதுகிறார் வாழ்க, வளர்க அவரின் பேனா.

**சி. குமாரதாசன்**
கரவெட்டி.

---



திருடன்; இந்தா பெரிய சங்கிலியாய் திருடி வந்தனான், கழுத்தில் கட்டிக்கொள்
மனைவி; உங்களுக்கு காமாலை நோய் வாங்க; டாக்டரிடம் போவோம்.
திருடன்; ஏன்?
மனைவி; நாய்ச் சங்கிலியையல்லவா திருடி வந்திருக்கிறீங்க!

—ஜோக்ரட்டீஸ்

---

## ஏப்பம்

ஈரான், ஈராக்,
இஸ்ரேல், லெபனான்,
இடைவிடா சமர்கள்!
ஏனென்றால் இவர்களின்
மிதமிஞ்சிய எண்ணெய்க்
குதங்களின் ஏப்பங்களே.

## குறி

நாங்கள் மாடுகள்,
எங்கள் மேல்
இங்கிலிஷ எழுத்துக்கள்
இன்னார் மாடுகள்
இவையென்று! இனம்
கண்டு கொள்வதற்கோ?
அல்லது ஏ, பீ, சீ, டி.
எழுதிப் படிக்கிறார்களோ
தெரியவில்லை. ஆனால் ஒன்று
சுட்டு காய்ச்சிய கம்பியை
உங்கள் மீது வைத்தால்
உண்மை புரிந்து விடும்.

—நொச்சி ஆனந்தன்

# பின் சிரிப்பு!

சிறையதிகாரி: மரண தண்டனை நிறைவேற்றப்படுமுன்பு உமது கடைசி ஆசை என்ன?

கைதி: அணு யுத்தம் முடிந்தபின்எனது தண்டனையை நிறைவேற்றுங்கள்.

— திக்கவயல்

- என்ன நீங்கள் பெரிய கமக்காரன்; கவலையாக இருக்கிறீங்க?
- ☐ மிளகாய் உற்பத்தி செய்யத் தென்னம் தோட்டத்தை அழித்ததை நினைத்துக் கவலையாக இருக்கு.

— திக்கவயல்

- அடிக்கடி விபத்துக்களில் மாட்டுப்படும் நீங்கள் இன்று நிதானமாக ஓடுகின்றீர்கள்!
- ☐ மது அருந்தியிருகின்றேன்.

— திக்கவயல்

ஒருவர்: உங்கள் மகனுக்கு உண்மையான புவியல் ஞானம்பிறந்துவிட்டது இலங்கைப் படத்தில் களுத்துறையை மாத்திரம் சரியாகக் குறித்து இருக்கிறுன்.

குடிகாரன்; !!!

— திக்கவயல்

- மாப்பிளை இனும் கேட்க மறுக்கிறுர் சீர்திருத்தவாதி போலே
- ☐ நீங்கள் ஒண்ணு... இனமுக்குப் பதிலாக மாப்பிளை தென்னம் தோட்டம் கேட்கிறுர்.

— திக்கவயல்

- இந்தப் பணக்காரன் ஏதும் தானதர்மம் செய்திருக்கிறுரா?
- ☐ அவர் எச்சில் கையால் கூட காகம் கலைப்பதில்லை என்பது உண்மை ஆனுல் அவர் மூட்டைப் பூச்சிக்கும் நுளம்பிற்கும்தானம்செய்தது உண்மை

— ஜோக்கிரடீஸ்

- உன்னை கணக்கு வாத்தியார் தோப்புக்கரணம் போடச் சொல்ல கஷ்டப்படாமல் போட்டியே! நீ கோயிலில் தோப்புக்கரணம் போட்டுக் கும்பிடுவதுண்டா?
- ☐ மினி பஸ் கொண்டக்டர் போடப் பழக்கியவர்.

— கு. முரளிதரன்

வெளிநாட்டால் வந்தவர்;
இப்ப இலங்கையிலும் வெளிநாடுகள் போல இடது பக்க ஓட்டமோ?

உள்நாட்டவர்:
அப்படியொன்றுமில்லை மினி வான்காரர்கள் முன்னுக்குப் போற பஸ்சுகளை முந்திறதுக்காக பக்கம் மாறி ஓடுறுர்கள்

— கு. முரளிதரன்

- உன் மனைவி உன் நகைச்சுவைக்கு சிரிப்பாளா?
- ☐ சம்பள நாளன்று தரமில்லா நகைச்சுவை சொன்னாலும் விழுந்து விழுந்து சிரிப்பாள், மற்றும் நாட்களில் தரமான நகைச்சுவை சொன்னாலும் சிரிக்கமாட்டாள்.

— அதிமதுரம்

- பவுண் பல்லு கட்டிய பின் யாரையும் பார்த்துச் சிரிக்கப் பயமாயிருக்கு.
- ☐ ஏன்?
- பவுண் பல்லை அடைவு வைப்பதற்கு கேட்டாலும் கேட்டிடுவாங்க.



- பாதயாத்திரை போவதாக விளம்பரப் படுத்தினுயே...... ஏனப்புறம் பாதயாத்திரை போகவில்லை?
- ☐ கடன்காரருக்குப் பயந்து கான்சல் செய்திட்டேன்.

— சர்மா

## மாப்பிளை விலைப் பட்டியல்

உள் நாடு — ரூபா 20 ஆயிரம்

வெளிநாடு — ரூபா 2 இலட்சம்

— வேணு

# ஹோம் பினான்ஸ் லிமிட்.

463, காலி வீதி,
கொழும்பு-3.
போன்: 589190

82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

## மக்கள் விரும்பும் பினான்ஸ் கொம்பனி

வீட்டுப் பொருட்கள் — கடன் கொடுப்பனவுகாரர்,
வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்,
பட விநியோகஸ்த்தர்கள்,
உல்லாச பஸ் சேவையாளர்,
காணி நிலே முதலீட்டாளர்கள்,
கட்டிட கொந்தராத்துக்காரர்,
புடவை விநியோகஸ்தர்

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகவும்
வளர்ந்து வருவது

## ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

கிளை: இல. 82, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
போன்: 24310

தலைமையகம்:
ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

## பிள்ளைச் செல்வத்திற்கு அடுத்த செல்வம் தென்னம் பிள்ளைச் செல்வம்

அந்நிய நாட்டுப் பணம் வருவிக்கும் முப் பொருள்களில் தேங்காயுமொன்று. எமக்கு கூரையுமாகி வேலியுமாகி, உணவுமாகி, இறைவனை உபாசிக்க உதவும் அர்ச்சனைப் பொருளுமாய் வாழ்வு தரும் தருதென்னை. எல்லாமுணர்ந்த பாரதியும் ''பத்துப் பன்னிரண்டு தென்னை மரம் வேண்டும்'' என்றல்லவா பாடியிருக்கிறார்.

எமது அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

நீலந் தோய்க்கும் வேலைச் சிரமமின்றி உங்கள் ஆடைகள் நொடிப் பொழுதில்

விசேட வெண்மையும்

அதி பிரகாசமும் பெற




சிறந்த வழி — சிக்கனமான வழி — இலகுவான வழி

பாவியுங்கள்

# ● மில்க்வைற் நீல சோப் ●

## குறைந்த செலவில் நிறைந்த பயன்

மில்க்வைற் உற்பத்திகளுக்குக் கிடைக்கும் ஆதரவு

நாட்டின் நற்பணிக்கே

## ★ மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் ★

யாழ்ப்பாணம்.

த. பெ. இல: 77 தொலைபேசி: 23233


பிரதம தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது பதிவு இல Q. J. 35 (N) 83
● 550, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால்
550, கே. கே. எஸ். வீதியில் உள்ள சிரித்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.